CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தஞ்சை மாவட்ட
சப்தஸ்தான விழாத் தலங்கள் - வரலாறு

(திருவையாற்றைப் போல் ஏழு ஊர்களில் நடைபெறுகின்றன)

அம்மையப்பர் அறம்வளர்த்த நாயகிஉடனாய ஐயாறப்பர் கண்ணாடிப்பல்லாக்கு

மாப்பிள்ளை பல்லாக்கு சுயசாம்பிகை உடனாய நந்திகேஸ்வரர் வெட்டிவேர் பல்லாக்கு

நூலாசிரியர்கள் :
"தருமை ஆதீனப்புலவர்" சைவத்தமிழ் அறிஞர்
புலவர். கோ. சுப்பிரமணியனார்
புலவர். சு. பத்மா, எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.,

Center for Shaiva Studies, Pondicherry Collection

திருவையாறு.

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சப்தஸ்தான விழா – நடைபெறும் தலங்கள் – வரலாறு



தருமை குருமகா சந்நிதானத்தின்
பொன்னார் திருவடிக்கமலங்களைப் போற்றி வணங்கி
திருமுன் இந்நூலை ஏற்புடைத்தாக்குகின்றோம்.

தருமை ஆதீனப்புலவர் கோ. சுப்பிரமணியனார் - பத்மா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

C.S.S.

உ
சிவ:சிவ:

தஞ்சை மாவட்ட
சப்தஸ்தானவிழா நடைபெறும்
தலங்கள் வரலாறு

1. திருவையாறு
2. கரந்தை
3. சக்கராப்பள்ளி
4. திருநல்லூர்
5. திருக்குடந்தை
6. திருநீலக்குடி
7. திருக்கஞ்சனூர்

சீரார் திருவையாறா போற்றி!

நூலாசிரியர்கள் :
"தருமை ஆதீனப்புலவர்" "ஐயாற்றுத் தமிழ்த்தாத்தா" "நல்லாசிரியர்"
"சைவத்தமிழ் அறிஞர்" "தமிழ்மாமணி"
புலவர் கோ. சுப்பிரமணியனார்
ஐயாறனடிமை
"முக்கலைச்செல்வி"
புலவர் பத்மா சுப்பிரமணியம் M.A., M.Ed., M.Phil.,
தையல் T.T.C, ஓவியம் T.T.C, புலவர் D.I.T, B.Lit., B.Ed.,
திருவையாறு. நன்கொடை : ரூ.30

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூல் விளக்கப் பட்டியல்

நூற்பெயர்	: சப்தஸ்தான விழா நடைபெறும் தலங்கள் வரலாறு (தொகுப்பு நூல்)
ஆசிரியர்கள்	: புலவர். கோ.சுப்பிரமணியனார்
	புலவர். பத்மாமணி எம்.ஏ., எம்எட்., எம்பில்.,
உரிமை	: ஆசிரியர்க்குரியது
வெளியீடு எண்	: 32
மொழி	: தமிழ்
வெளியீட்டு நாள்	: சப்தஸ்தான நாள் 2010
பதிப்பு	: முதல் பதிப்பு
தாள்	: வெள்ளைத்தாள்
நூல் அளவு	: 1×8 டிம்மி
எழுத்தளவு	: 11 பாயிண்டு
பிரதிகள்	: 1000
பக்கங்கள்	: 60
விலை	: ரூ.30
ஒளி அச்சிட்டோர்	: பாப்புலர் ஆப்செட் பிரிண்டர்ஸ், திருவையாறு.
பாடம்	: ஏழூர் விழாத்தலங்கள் வரலாற்றுத் தொகுப்பு நூல்

நூல் கிடைக்கும் இடம் :

ஐயாறப்பர் அருளகம்,
222,தெற்குவீதி திருவையாறு, 613 204
தஞ்சைமாவட்டம். போன் : 04362 - 261728.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏழூர்த்தலங்கள் - ஒரு அறிமுகம்

1. திருவையாறு ஸப்தஸ்தானத் தலங்கள் :

திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம்.

2. கருத்தட்டாங்குடி ஸப்தஸ்தானத் தலங்கள் :

கரந்தை, வேளூர், தென்குடித்திட்டை, கூடலூர், கடகடப்பை, புன்னைநல்லூர், பூமாலை.

3. திருச்சக்கராப்பள்ளி ஸப்தஸ்தானத் தலங்கள் :

திருச்சக்கராப்பள்ளி, அரிமங்கை, சூலமங்கை, பசுபதிமங்கை, நந்திமங்கை, தாழமங்கை, திருப்புள்ளமங்கை.

4. திருநல்லூர் ஸப்தஸ்தானத் தலங்கள் :

திருநல்லூர், கோவிந்தகுடி, ஆவூர், ஓரி மணத்திடல், மாளிகைத்திடல், மட்டையாந்திடல், மருத்துவக்குடி.

5. திருக்குடந்தை ஸப்தஸ்தானத் தலங்கள் :

திருக்குடமுக்கு, திருக்கலயநல்லூர், திருவலஞ்சுழி, தாராசுரம், சுவாமிமலை, கொட்டையூர், மேலக்காவேரி.

6. திருநீலக்குடி ஸப்தஸ்தானத் தலங்கள் :

திருநீலக்குடி, இலந்துறை, ஏனாதிமங்கலம், திருநாகேசுவரம், திருபுவனம், திருவிடைமருதூர், மருத்துவக்குடி.

7. திருக்கஞ்சனூர் ஸப்தஸ்தானத் தலங்கள் :

திருக்கஞ்சனூர், திருவாவடுதுறை, தென்குரங்காடுதுறை, திருமங்கலக்குடி, திருமாந்துறை, திருக்கோடிக்கா, திருவாலங்காடு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முனைவர். ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்
எம்.ஏ.எம்ஃபில், பி.எச்.டி
கட்டளை விசாரணை – பஞ்சநதீஸ்வரர் ஆலயம் – திருவையாறு.
தருமையாதீனம் ஸ்ரீ மௌனமடம் – மலைக்கோட்டை
திருச்சிராப்பள்ளி – 620 002. போன் : 0431 – 2702472 செல் : 94431 50332

தேதி : 23.11.09

ஆசியுரையும் அணிந்துரையும்

"திருவின் மாமரம் ஆர்பழனப்பதி
அயிலு சோரவை ஆளுதுரைப்பதி
திசையினான் மறை கேடிய முற்பதி
சிரமு மாநிலம் வீழ்தொரு மெய்பதி
திருவையாறுடன் ஏழு திருப்பதி பெருமாளே!"
– அருணகிரிநாதர்

திருவையாற்று ஐயாறப்பர் ஏழூர் திருவிழா மிகத்தொன்மையும், சிறப்பும் வாய்ந்தது. உண்மையில் தென்னாட்டுத் திருவிழாக்களில் எல்லாம் இதனை சிறப்பானதாக கூறலாம்.

சைத்திர மஹோற்சவத்தின் ஐந்தாம் திருநாளில் திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் முடிய சுவாமிகளுக்கு திருமுகம் எழுதப்பெற்று அவர்கள் திருவையாற்றுக்கு எழுந்தருளுவதும், அத்தலங்களுக்கு சித்திரை விசாக நட்சத்திரத்தில் ஐயாறப்பர் தர்மசம்வர்த்தனியுடன் விசித்திர கண்ணாடிப் பல்லக்கிலும், உடன் நந்தியெம்பெருமான் சுயசாம்பிகை வெட்டிவேர் பல்லக்கிலும் எழுந்தருளுவது இவர்கள் அத்தலத்து எல்லையில் எதிர்அழைத்துபோதலும் என மிகச்சிறப்பான விழா நடைபெறுகிறது.

இதனைப்போன்று கருந்திட்டைக்குடி, திருச்சக்கராப்பள்ளி, திருநல்லூர், கும்பகோணம், திருநீலக்குடி, திருக்கஞ்சனூர் முதலிய தலத்திலும் அதனைச் சுற்றியுள்ள சப்தஸ்தான விழா நடைபெறுகிறது.

இத்திருவிழாவினை நமது பாராட்டுதலுக்கும் அன்பிற்குமுரிய தருமையாதீனப்புலவர் கோ. சுப்பிரமணியனார், ஒவ்வொரு தலத்தின் பெருமை, சுவாமி அம்பாள் திருநாமம், அத்தலம் அமைந்த வழித்தடம், எந்த மாதத்தில் – எந்த நட்சத்திரத்தில் – எந்த ஐதீகத்தினை முன்னிட்டு எத்தலத்துப் பெருமான் – எவ்வெவ்தலத்திற்கு எழுந்தருளுகின்றார் என்கின்ற அற்புதமான ஆய்வு நூலினை வெளியீடு செய்கிறார்.

நாளும் ஐயாற்றெம்பெருமானின் புகழ் பேசல், எழுதுதல், சிந்தித்தல், நிட்டைகூடல் என அடிமையாம் திறத்திற்கு எவ்வெல்லை கூறுவது திருவையாறுத்தலம், திருவையாறுத்திருக்கோயில், திருவையாற்றுத் திருவிழா என அறிய படைப்புகள் பல கண்டவர். அவ்வகையில் சப்தஸ்தான திருவிழா நூல் மிகவும் அற்புதமான நூல். அனைவரின் இல்லங்களிலும் இருக்க வேண்டியது.

கலைமகள் பிர்மதேவனின் நாவில் வீற்றிருக்கின்றாள். ஆனால் பிர்மனால் படைக்கப்பெற்ற உயிர் அழிவுடையது. புலவனால் படைக்கின்ற நூல் என்றும் அழிவில்லாதது. இவ்அழியா நூலைத்தந்த தருமையாதீனப்புலவர். கோ. சுப்பிரமணியனார்க்கு செந்தமிழ்ச் சொக்கநாதர் திருவருளும் தருமையாதீன குருமணியின் குருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூன்முகம்

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின், பாடிப் பணிமின், பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே"

திருமூலர் - திருமந்திரம்

எல்லாம் வல்ல அருள்மிகு அறம் வளர்த்த நாயகியுடனாய ஐயாற்றெம் பெருமானின் தண்ணருட் கருணை சுரந்ததன் வெளிப்பாடே திருவையாறு முதல் ஏழூர் வலம்வரும் திருத்தலங்களின் வரலாற்று நூலாகும்.

இன்றைய உலகியல் வாழ்வில் மக்கள் வாழ்க்கை, ஓர் இயந்திர வாழ்க்கையாகவே மாறி வருவதை நாளும் நாம் காண்கின்றோம். எங்கும் எதிலும் ஒரே பரபரப்பு, பதட்டநிலை பற்றாக்குறை, வறுமை, நோய், போராட்டம், எனப் பலவகையாலும் அல்லறும் மக்களின் அவலநிலை ஒரு புறம், இந்நிலை மாற மாற்றுமருந்து கிட்டாதா? என்று ஏக்கப்பெருமூச்சுடன் மன அமைதி தேடுவார்க்கு, "அழுதால் உன்னைப் பெறலாமே" என்ற அருளாளர்தம் அருள்வாக்கு அறிவுறுத்த, அதன் வழி இறைவழிபாட்டைப் பின்பற்றுவார் ஒருபுறம்.

அஃதேபோல், விஞ்ஞானமும், மெய்ஞானமும் ஒன்றை ஒன்று போட்டி போட்டுக் கொண்டு தன் ஆதிக்கத்தைச் செயல்படுத்திவரும் இக்காலச்சூழலில் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற நிலையில் சினிமா, தொலைக்காட்சி, ஆடம்பர நடையுடை பாவனை நாகரிகமே உண்மை வாழ்க்கை என நாட்களை வீணாககழிப்பார் கூட்டம் ஒருபுறம்; இருவேறு வகைப்பட்ட இம் மக்களின் மனநிலையை அன்றே கண்டறிந்த அப்பர் பெருமான்,

"தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்று கின்றா ரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க் கணக்கு இன்னம்பர் ஈசனே!"

இறைவுணர்வுடையார் யார் யார்? வீண்பொழுது போக்கித் திரிவார் யார் யார்? என்பதையெல்லாம், திருஇன்னம்பர் ஊர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இறைவன் நாளும் கண்டு தன் கணக்கில் வரவு வைத்துக் கொண்டு வருகின்றானாம். எனவே, தூயமனத்தராய்; அமைதி வாழ்வினராய், இன்பவாழ்வில் இனிதே திளைத்திட இன்றைய சூழ்நிலையில் இறைவழிபாடும், தலவழிபாடும், திருவிழாக்களைக் கண்டு மகிழ்தலுமே மனமாற்ற மருந்தாகும். எனவே, தல யாத்திரையில் தனிச்சிறப்பாகப் பலன் தரும். மகாமகம் என்றால் கும்பகோணமும், தீபம் என்றால் திருவண்ணாமலையும், சஷ்டி என்றால் திருச்செந்தூரும், சப்தஸ்தானம் என்றால் திருவையாறு ஏழூர் தலமும் நினைவிற்கு வரும். அதுபோல தொகுப்புத் தலங்களான நவக்கிரக தலங்கள், பஞ்சபூதத் தலங்கள், ஆறுபடைவீட்டுத் தலங்கள் வரிசையில் தஞ்சை மாவட்ட சப்தஸ்தான தலங்கள் ஏழு ஊர்களில் நடைபெறுகின்றன. **அவ்ஏழு** ஊர்களின் ஏழூர்வலம் வரும் விழாக்களில் கலந்து கொண்டு இன்பம் காண விழைவோரை அன்புடன் அழைக்கின்றது இவ்வருள் நூல், இயலாத நிலையில் வருந்தும் அன்பர்கள், இருந்த இடத்தில் இருந்து கொண்டே படிப்போர்கள் ஏழு ஊர் வலம்வரும் **ஏழூர்த் தலங்கள்** மொத்தம் **நாற்பத்து ஒன்பது** தல மூர்த்திகளையும் வழிபட்டு வலம் வருவது போன்ற இன்பங்களை நினைவூட்டவல்ல அரிய நூல் இத்தலவரலாற்றினை ஒரு முறை படித்துப் பாருங்கள், பின் பலன் தரும் பாருங்கள்.

1. திருவையாறு
2. கரந்தை
3. சக்கராப்பள்ளி
4. திருநல்லூர்
5. கும்பகோணம்
6. திருநீலக்குடி
7. திருக்கஞ்சனூர்

உண்மையில் திருவருள் நலத்துடன் எழுதப்பெற்ற இத்தெய்வீகத்திருநூல் தங்கள் திருக்கரங்களில் திகழ்கிறது. யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிலையில் தங்களைப் போன்ற நம் அன்பிற்குரியார் பலரது இல்லங்களில் இந்நூல் இடம் பெறுமாயின் நாற்பத்து ஒன்பது தலப்பெருமான்களும் ஒருசேர எழுந்தருளியிருந்து அனைவருக்கும் அருள்நலம் பாலிப்பர் என்பது உறுதி. இந்நூல் வெளிவர ஒத்துழைத்த ஆசியுரை வழங்கிய சுவாமிகள் அழகுற அச்சேற்றித்தந்த திருவையாறு பாப்புலர் ஆப்செட் அச்சகத்தார் ஆகிய அத்தனை நல்ல உள்ளங்கட்கும் எங்களது நன்றி. இந்நூலைப் பெற்றுப் பலரும் புயனடையும் வகையில் தொண்டாற்றும் புண்ணியத்தில் ஈடுபடுவோர்க்கும் நன்றி.

வாழ்க வளமுடன்

ஐயாறப்பர் அருளகம்,
222, தெற்கு வீதி,
திருவையாறு.
29.12.2009.

தங்கள் அன்புள்ள
புலவர் **கோ. சுப்பிரமணியன்**
புலவர் **பத்மாமணி**

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அந்தணர்புரம் எனும் அந்தணர்க்குறிச்சி திருநந்தித்தேவர் அவதாரத்திருவிடம் செல்லும் நுழைவாயில்

புராண ஐதீக விழா

திருவையாற்றின் வடக்கு வீதி இடையில் அந்தணர் குறிச்சி எனும் அந்தணர் புரத்தே சிலாத முனிவர் வாழ்ந்து வந்தார். அக்காலத்தே கோவிலைச் சுற்றிலும் சிவனுடைய இடமெனக் கருதி முனிவர்கள் அங்கு வாழாது. சற்று விலகியுள்ள அந்தணர் புரத்தே வாழ்ந்து வந்தனர். சிலாதர் துர்வாசரின் மாணாக்கர். வசிட்டரின் தங்கை சாருலஷணையை மணந்தவர். முற்பிறவியில் அதிதிக்கிட்ட உணவில் கல்லிருந்த பாவம் கழிய, கல்லையே தூளாக்கி உணவாக உட்கொண்டதால் சிலாதர் என பெயர்பெற்ற அவர் மகப்பேறு வேண்டி தவமியற்றி வந்தார்.

சிவபெருமான் அருளிய வண்ணம், புத்திரகாமேட்டி யாகம் செய்ய யாக சாலை நிலத்தை உழுதார். அப்பொழுது பெட்டகத்தில் குழந்தையாகத் "திருநந்தித்தேவர்" கிடைக்கப் பெற்றார். மான்மழுவுடன் நான்கு கைகளையுடைய குழந்தையாக இருக்கக்கண்டு அஞ்சவே, அசரீரியாக, "மூடித்திற, இக்குழந்தை 16 ஆண்டுகள் உன்னுடன் இருப்பான்," என்றதும் சிலாத முனிவரும், அவர் மனைவியும் அக்குழந்தையை எடுத்து '**செப்பேசர்**' எனப் பெயர் சூட்டி வளர்த்து வந்தனர். இந்நிகழ்ச்சி ஐயாற்றில் ஆண்டுதோறும் நடந்து வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அன்று அந்தணர்(குறிச்சி) புரத்தே "**சிலாத முனிவர் ஆஸ்ரமம்**" அதுவே இன்று **ரிஷிநந்தி விநாயகர் கோயிலாக** மாறி விளங்குகிறது.



திருநந்தியெம்பெருமான் திருஅவதாரம் நிகழும் நினைவுத்திருவிடம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருநந்தித்தேவர் அவதார விழா

திருவையாறு வடக்கு வீதி இடையில் தோரணவாயில் – நுழைவு வாயில் வழியே உள்ளடங்கியுள்ள அந்தணர்குறிச்சியில், "**சிலாதர் ஆஸ்ரமம்**" இன்று பிள்ளையார் கோயிலாகவுள்ளது. பங்குனி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று அதிகாலை ஐயாறப்பர் புறப்பட்டு அந்தணர்புரம் சென்று **நந்தீசர் பிறக்கும் ஐதீகத் திருவிழா** நிகழ்வுறும்.

சிவாச்சாரியார். குளத்தருகே குறிப்பிட்ட திருநந்தியெம் பெருமானின் திருஅவதாரம் நிகழும் நினைவுத் திருவிடத்தில் மந்திர பூர்வமான கிரியைகளை நிலத்திற்குச் செய்து, சிறிய (ஏர்) கலப்பையால், நிலத்தை உழ, சிறிய செப்புப் பெட்டி ஒன்று கிடைக்கும். அதில் குழந்தை வடிவில் நந்தீசர் கிடக்க, அவரை எடுத்துப் பால் கொடுத்து அபிடேகம் செய்து, ஆடை அலங்காரம் செய்து தீபாராதனை செய்வார். மக்கள் பக்தியுடன் பணிவர். அதுபோது அடியோம் விழாச் சிறப்பை எடுத்துரைப்போம்.

உழுத நிலத்தில் கிடைத்த நெல்லைச் சிவாச்சாரியார் முகந்து ஆங்கு வந்துள்ள அன்பர்கள் மக்களுக்கு முந்தியிலிடுவார். அத் தெய்வ நெல்லையும், உழுத நிலத்து மண்ணையும் பெற்றுக் கொணர்ந்து வீட்டு நெற்களஞ்சியத்தே நெல்லையும், மண்ணை வயலிலும் இடப் '**பெருகும்**' என்பது மக்கள் நம்பிக்கை.

சகல கலைகளிலும் வல்ல செப்பேசர் தம் 14வது ஆண்டில் பெற்றோரின் கவலையகற்ற சூரியபுட்கரணியில் கழுத்தளவு நீரில் தவம் இயற்ற, மீன் முதலியவற்றால் அரிப்புண்டு எலும்புருவாய உடம்பை, ஐயாற்றெம்பெருமான் காட்சி தந்து ஐந்து வகை நீரினால் நன்னீராட்டி நலம் பெறச் செய்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பட்டாபிஷேக விழா :

அன்று மாலையில் ஐயாறப்பர் சந்நிதிமுன் நந்திகேஸ்வரரை அமர்த்தி ஐந்து குடங்கள் வைத்து ஸ்நபனம் ஹோமம் செய்வர். ஐயாறப்பரே வந்து சூரியதீர்த்தம், சந்திரதீர்த்தம், கங்கை நீர், உமாதேவியின் கொங்கை நீர், நந்திவாய் நுரைநீர் ஆகிய ஐந்து வகைத் தீர்த்தத்தாலும் அபிடேகம் செய்வதாக சிவாச்சாரியார் சிறப்பு அபிடேகம் செய்விப்பார். இதுவே ஐயாறு என்பதற்கு உண்மைக் காரணம் அபிடேகம் முடிந்து ஞானோபதேசமும், மூலத்தானத்திலிருந்து **"தங்கப்பட்டம்"** ஒன்று எடுத்துவந்து "நந்திகேஸ்வரர்" என தீட்சாநாமப் பட்டமும், வேத்திரப்படையும் சூட்டப்பெறுவர்.

மான் மழுவுடன் கூடிய நான்கு கைகள், முக்கண், வேத்திரப்படை (பொற்பிரம்பு) போன்றவையளித்து தனக்குச் சமமானவராகக் கருதும் நிலையும், சிவகணங்களுக்குத் தலைவராம் பதவியும், முதல் குருநாதனாம் தகுதியுமாக அதிகாரம் தந்து தலைக்கு முடி அணி வித்துப் பட்டுச் சார்த்தப் பெறுவர். இவ்வாறு பட்டாபிஷேக விழா மிகச் சிறப்புற நிகழ்ந்து சுவாமி வீதி உலாப் போதருவார்.

யோக வலிமையுடன் கூடிய அனாதியான நந்திதேவர் நான்கு வேதங்களைப் பாதங்களாகக் கொண்டு பரசிவத்தை எந்நேரமும் சுமந்து நிற்கிறார். ஐயாறப்பர் தாமே அந்த நந்தித்தேவர் தமக்குள் வேறுபாடு இல்லை. இருவரும் ஒன்றான நிலையில் நின்று அருள்புரியப் போவதாக, அன்று ஆசி கூறினார். அதனால் தான் சிவபெருமானின், ரிஷப வாகனக்காட்சி யை வழிபடுதல் மகா புண்ணியம் என்று வேத, புராண ஆகமங்கள் விளம்பின. அதன்படி யாவரும் வழிபடுகின்றோம். நந்தீசர் திருமணவிழா திருமழபாடியில் மறுநாள் நடைபெறும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருநந்தியெம் பெருமான் போற்றி :

அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லாம் முதல்குரு நாதனாகிப்
பங்கயம் துளபம் நாறும் வேத்திரப்படை பொருத்த
செங்கையம் பெருமான் நந்தி சீரடிக் கமலம் போற்றி!

திருவிளையாடல் – பரஞ்சோதியார்.

திருமழபாடியில் நந்தி கல்யாண உற்சவம்



திருமழபாடி - வடகரைத்தலம் - 54வது தலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவரே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

– சுந்தரர் பாடல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருமழபாடி காவிரி வடகரைத்தலம். திருவையாற்றுக்கு மேற்கே 5 கி.மீ. தூரத்திலுள்ள வைத்தியநாதன் பேட்டை கொள்ளிடக் கரையின் எதிர் கரையில் திருமழபாடி உள்ளது. இவ்வழியில் தான் ஐயாறப்பரும், மாப்பிள்ளை நந்தீசரும் வருவர்.

கொல்லிமழவன் ஆண்டபோது அவனுடைய படைகள் தங்கியிருந்த இடமாதலின் மழவர் பாடி, மழபாடியாயிற்று. (பாடி படைகள் தங்கும் இடம்) மார்க்கண்டேய முனிவருக்காக இறைவன் மழுஏந்தி நடனமாடிக் காட்சி தந்தமையால் திருமழு ஆடி, திருமழ பாடியாயிற்று என்பது புராணம், மூவர் பாடல் பெற்றத்தலம். பிரம்மலோகத்திலிருந்து புருஷாமிருகம் கொணர்ந்த சிவலிங்கம் பிரம்மனால் எடுக்க முடியாதபடி நிலைத்துவிட்டது.

சுவாமி – வஜ்ரதம்பேசுவரர், வைத்தியநாதர், மழுவாடீசர், மாணிக்கப் பெருமான்.

அம்பிகை – சுந்தரநாயகி, அழகம்மை வெள்ளம்தடுத்த பிரளய விநாயகர்.

தீர்த்தம் – காவிரியின் கிளை நதிகொள்ளிடம், கங்காதேவி யமுனை, சரஸ்வதியுடன் காசியம்பதியில் விஸ்வநாதர் சந்நிதியில் உத்தரவாகினியாகப் பிரவகித்து ஓடுவது போல, திருமழபாடி தலத்திலும் சுவாமி சந்நிதியில் கொள்ளிடமாகிய காவிரி நதியும் உத்தரவாகினியாக வடக்கு நோக்கிச் செல்கிறாள். ஆதலின் இதனை தெட்சிணகாசி என்பர்.

விருட்சம் – பனைமரம்
தேவாரப்பதிகங்கள் 5

கல்வெட்டுகள் 30

திருஆலம் பொழில் தலத்திலிருந்த சுந்தரரை **'மழபாடி'** வர மறந்தனையோ எனக்கூவி அழைத்ததலம். இங்குதான் சுந்தரர் **'பொன்னார் மேனியனே'** பதிகம் பாடினார்.

நந்தீசர் திருமண விழா : விழா நிகழ்முறை

மறுநாள் பங்குனி சுக்கிலபக்ஷம் புனர்பூச நட்ஷத்திரத்தன்று குதிரை வாகனத்தே நந்தியெம்பெருமான் அமர்ந்து திருமணத்திற்காக மாப்பிள்ளைக் கோலத்தில் ஐயாற்றுக்கு மேற்கே 7 கல் தொலைவிலுள்ள திருமழபாடிக்கு எழுந்தருளுவர். அவருடன் அறம் வளர்த்த நாயகி உடனாய ஐயாற்றெம் பெருமான் வெட்டிவேர் பல்லக்கில் உடன் செல்வார். இக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

வழியில் பஞ்சபூதத்தலங்களாக அமைந்துள்ள திருநெய்த்தானம் (தீ) கடுவெளி (வான்), மழபாடி (நீர்) சென்று வரும் பொழுது பெரும்புலியூர் (காற்று), ஐயாறு (மண்) எனும் தலங்களின் வழியாக வலமாக வருவர். இதன் அருமை ஐயாறன் பெருமையே ஆகும். ஆண்டுதோறும் **"நந்தீசர் திருமணவிழா"** பங்குனி புனர்ப்பூசநாளில் சிறப்பாக நடைபெறும்.

விழா அழகு

வழியில் உள்ள ஒவ்வொரு ஊரும் விழாக்கோலம் பூண்டிருக்கும். இக்கிராம மக்கள் பக்தி வெள்ளத்தில் மூழ்கி ஐயாறப்பரை, பெரியவர் நம் ஊர் வருகிறார். ஆண்டில் ஒரு நாள் நமக்கு அருட்பிரசாதம் வழங்கி நம்மை வாழ்விக்க வருகிறார். நாம் அவருக்கும் அவர் அடியார்களுக்கும் நம்மாலான பிரசாதங்களை வழங்குவோம். என ஒவ்வொருவர் வீடும் திருமண வீடாகவே காட்சியளிக்கும். வீட்டு வாசலில் பந்தல், வாழை மரம், தோரணங்களுடன் நீர் மோர், பானகம், அன்னதானம் என வழங்கி மகிழ்ச்சியுடன் மக்கள் கொண்டாடுவர். தலைமுறை தலை முறையாக இக்கிராம மக்கள், உயிருக்கு உறுதி பயக்கும் இவ்வழி பாட்டு நெறிமுறைகளைக் காலங்காலமாகச் செய்து வருகிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருநந்திதேவர் திருக்கல்யாணம்



திருமழபாடி சுந்தராம்பிகை உடனாய வைத்தியநாதசுவாமி கோயிலில் சுயசாம்பிகை தேவியாரும், திருநந்தியெம்பெருமானும் திருக்கல்யாண கோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்.

திருமண விழா

மழபாடி மாணிக்கப் பெருமான், கொள்ளிடம் ஆற்றில் வந்தமர்ந்து நம் ஐயாறப்பரையும், மாப்பிள்ளை நந்திகேஸ்வரரையும் எதிர்கொண்டு அழைத்துச் செல்வார். மாலை 6 மணி அளவில் கொள்ளிடக்கரை அருகில் உள்ள திருமழபாடி திருக்கோயில் முன் மண்டபத்தே அருள்மிகு சுந்தராம்பிகையுடனாய வஜ்ரதம்பேஸ்வரர் அருள்மிகு ஐயாறப்பருடன் அவரவர் கண்ணாடிப் பல்லக்கில் அழகாக அமர்ந்திருப்பர். கோயில் மரியாதையுடன் திருமண வரிசையாக புத்தாடை, தேங்காய், பழம், சந்தனம், மாலை வகைகளை மங்கள வாத்தியத்துடன் மங்கல மடந்தையர் எடுத்து வருவர்.

வசிட்ட மகரிஷி பேர்த்தியும் வியாக்கிரபாதர் மகளுமான சுயசாம்பிகை யைத் திருநந்திகேஸ்வரருக்குத் திருமணம் செய்வித்து அருளுவார். நந்தியெம்பெருமானுக்கும் பெண் சுயசாம்பிகைக்கும் மங்கள நன்னீராட்டி, புத்தாடை அணிவித்து, மலர்மாலை சூட்டி மணமக்களாகக் காட்சியளிப்பர். சிவாச்சாரியார் முறையாக அக்னி காரியம் செய்து, திருமாங்கல்யத்தைப் பெண் சுயசாம்பிகையின் திருக்கழுத்தில் அணிவிப்பர். பின்புறம் மழபாடி கோயில் பாத்தியமுடைய சுமங்கலிப் பெண் ஒருவர் நின்று, மூன்று முடிச்சைப் போடுவர். தீபாராதனை ஆகி அருட்பிரசாதம் வழங்கப்பெறும். இதனைச் சுற்றுவட்டாரக் கிராம மக்கள் திரளாக வந்து கண்டு களிப்பர். நந்திகல்யாணம் முந்தி கல்யாணம் என்பது பழமொழி – திருமணமாகாதவர் காண திருமணம் உடன்கூடும். இரவு புனல் வாயில் பெரும்புலியூர் வழியாக மணமக்கள் திருவையாறு ஆலயம் வந்து சேருவர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
திருச்சிற்றம்பலம்

திரு நந்தியெம்பெருமான் நமக்காக ஐயாற்றெம்பெருமானிடம் வேண்டிப்பெற்ற பதினாறு பேறுகள் (வரங்கள்)

(கிடைத்ததற்கரிய இதனை வேண்டிப் பெறுவது நம் கடமையன்றோ!)

திருவையாற்றமர்ந்துறையும் சிவக்கொழுந்தே நின்பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம் அது தான் :

1. மறைகன் நிந்தனை சைவநிந் தனைபொறா மனமும்
2. தறுகண் ஐம்புலன் களுக்கு ஏவல் செய்யுறாச் சதுரும்
3. பிறவி தீதெனாப் பேதையர் தம்மொடு பிணக்கும்
4. உறுதி நல்லறம் செய்பவர் தங்களோடு உறவும் 1

5. யாதும் நல்லன்பர் கேட்கினு முதவுறும் இயல்பும்
6. மாதவத் தினோர் ஒறுப்பினும் வணங்கிடும் மகிழ்வும்
7. ஓதும் நல்லுப தேசமெய் யுறுதியும் அன்பர்
8. தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந் தெளிவும் 2

9. மனமும் வாக்கும் நின் அன்பர்பால் ஒருப்படு செயலும்
10. கனவிலும்உன தன்பருக்கு அடிமையாங் கருத்தும்
11. நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
12. புனித நின்புகழ் நாள்தோறும் உரைத்திடும் பொலிவும் 3

13. தீமை யாம்புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்
14. வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்
15. ஏமு றும்பரதாரம் நச்சிடாதநன் னோன்பும்
16. தூய்மை நெஞ்சில் யான்எனதெனும் செருக்குறாத் துணிவும் 4

துறக்கமீ துறையினும் நரகிற் தோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும! இவ்வரம்
மறுத்திடாது எமக்குநீ வழங்கல் வேண்டுமால்!

– திருவையாற்றுப் புராணம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதினாறு பேறுகளின் பொருள் விளக்கம்

எல்லா வல்ல ஐயாற்றெம்பெருமானே!

1. வேதங்களைப் பழித்தலும், சிவத்தைப் பழித்தலுமாகிய செயலைக் கண்டால் பொறுக்க இயலா மனத்தையும்,
2. மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புல ஆசைகட்கு அடிமைப்படாத அறிவையும்
3. எடுத்த பிறவி தீதாகுமே – என, அறியா மாந்தரோடு சேராது வாழும் மனமாறுபாட்டையும்
4. நல்ல அறச்சிந்தனை யுடையார்களோடு கொள்ளும் உறவையும்
5. சிவனடி மறவாச் சிந்தனையாளர், எது கேட்பினும் அதனை மறக்காது கொடுக்கும் தன்மையையும்,
6. தவவலிமையுடையவர் நம்மைத் தண்டித்தாலும் அதனை மகிழ்வோடு வணங்கி ஏற்றுக் கொள்ளும் இயல்பும்
7. குருநாதர் நமக்கு உபதேசித்த உண்மைப் பொருளை உறுதியுடன் கடைப்பிடிக்கும் ஆற்றலையும்,
8. சிவனடியார்கள் தீமை செய்தாலும் அதனைச் சிவச்– செயலென, ஏற்றுக்கொள்ளும் மனத்தெளிவையும்,
9. சிவனடியாரிடத்து மனமும் வாக்கும் ஒன்றுபடும் தன்மையையும்,
10. கனவில்கூட சிவனடியார்களை வணங்கும் மனப்பக்குவத்தையும்
11. மனத்தாலும் மற்றொரு கடவுளை வழிபடாத உறுதிப்பாட்டையும்
12. பெருமானே! நாள்தோறும் உனது புகழையே பேசிக்கொண்டு இருக்கும் இன்ப உணர்வையும்,
13. தீமைபுரியும் புறச்சமயங்களை அழிக்கவல்ல வீரஆற்றலையும்
14. உண்மையாகவே பிறரது பொருளுக்கு ஆசைப்படாத உளவளத்தையும்
15. விரும்பத்தக்க அழகுடைய பிறர் மனைவியைக் கண்டு ஆசைப்படாத நல் விரதத்தையும்,
16. பரிசுத்தமான மனத்தில் ‘யான் எனது’ எனும் தன்முனைப்பற்றதுறவு மனப்பான்மையுறும் துணிவையும்

முத்தியுலகே கிட்டினாலும், நரகஉலகே கிடைத்தாலும், இறந்தாலும், பிறந்தாலும், இன்பமே அனுபவித்தாலும் பிறைமுடி சூடிய பெருமானே! யான் விரும்பிக் கேட்டுக் கொள்ளும் இப்பதினாறு வரங்களையும் மறுக்காமல் தாங்கள் எமக்கு வழங்கியருள வேண்டுகிறேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவையாறு - கிழக்கு இராஜ கோபுரம்

திருவையாறு - காவரி வடகரைத் தலங்கள் 63ல் 51வது தலம்

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பமேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற்சோதீ!

\- அப்பர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவையாறு : தஞ்சைத் தலைநகரின் வடக்கே 13கி.மீ தூரத்தே உள்ளதலம், பேருந்து வசதியுண்டு. காவிரி வடகரைத் தலங்கள் 63ல் 51வது தலம். வடக்கே '**பஞ்சாப்**' என்பது போல தஞ்சை – திருவையாறு இடையே வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி என்ற ஐந்து ஆறுகள் ஓடுவதால் **திருஐயாறு** என்பர்.

கோயிற் பெயர்	–	**காவிரிக்கோட்டம்**
இறைவன்	–	**அருள்மிகு ஐயாறப்பர், பஞ்சநதீசர்**
இறைவி	–	**அறம்வளர்த்த நாயகி, தர்மசம்வர்த்தனி**
தலமரம்	–	**வில்வம்**
தலச்சிறப்பு மூர்த்தம்	–	**ஆட்கொண்டார், நந்தியெம்பெருமான்**
தீர்த்தம்	–	**சூரியபுஷ்கரணி, காவிரி**

கங்கையிற்புனிதமாய காவிரி சிறந்த 24 தீர்த்த கட்டங்களைக் கொண்டது. அதில் பூசமண்டபப் படித்துறை அழகும் சிறப்புமுடையது. துலாக்காவேரி, தைப்பூசம், அமாவாசை புண்ணிய நாட்களில் நீராட அனைத்துப் பாபங்களும் அகலும்.

அப்பர் எனும் திருநாவுக்கரசருக்கு ஆடி அமாவாசையில் கயிலைக்காட்சி கொடுத்தருளும் தலம். சுந்தரருக்கு காவிரி வழிவிட்ட தலம்.

நால்வர் பாடல் – சம்பந்தர் 5, அப்பர் 12, சுந்தரர் 1=18 அருணகிரிநாதர் – 2, மணிவாசகர் –3.

திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான கோயில்கள் 27ல் இதுவும் ஒன்று.

கோயில் அமைப்பு :

திருவையாறு திருக்கோயில் நான்கு சுற்றுக்களைப் பெற்றுத் திகழ்கிறது. கீழக்கோபுரம் எழுநிலை மாடங்களுடன் சிவ–சிவ ஒளி விளக்குடன் கூடிய இராசகோபுர வழி உள்ளே நுழைகிறோம். அடுத்து இரண்டாம் கோபுரம் 3நிலைகளுடையது கடந்து இடதுபுறம் திரும்பி 4ஆம் பிரகாரம் வலம் வரும்பொழுது திருக்குளம் தெற்குக் கோபுரவாசலில் ஆட்கொண்டார். தென்கயிலாயம், வடகயிலாயக் கோயில் கடந்து சந்நதி முன் தங்கக்கொடி மரம் சித்தி விநாயகர்தாள் பணிந்து வணங்குகிறோம். அடுத்து 200 கால் மண்டபம் ஏறி திருநந்தியெம்பெருமானிடம் உத்தரவு பெற்று அருள்மிகு ஐயாறப்பர் சந்நிதிமுன் வந்து நிற்கிறோம். பெருமான்மீது சாற்றியுள்ள புனுகுச் சட்ட வாசனை மூக்கைத் துளைக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அ.மி. ஐயாறப்பர் - அறம் வளர்த்த நாயகி



பெருமான் சுயம்பு வடிவம் – தான் தோன்றிநாதர், தீண்டாத்திருமேனி புற்றுமண் வடிவினராதலின் சரியாதிருக்க புனுகு சட்டம் சாத்தப்படுகிறது. விளக்கொளியில் மின்னுகிறார். கண்டு, காதலாகிக் கசிந்துருகிப் பாடிப்பரவுகிறோம். கருவறைமுன் அந்தராளம், ஸ்தபன மண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபங்கள் அமைந்துள்ளன.

அந்தராளத்தில், போகசக்தியம்மன், ஸ்தபன மண்டபத்தில் கல், செப்பு நந்திகள், பலிபீடம், ஆலவட்டம் முதலானவை விளங்கக் காண்கிறோம். கருங்கல் துவார பாலகர்கள் கருவறை வாயிலில் காணப்படுவதோடு கணபதியும் – எதிரே சூரியனும் தோற்றமளிக்கின்றனர். முதல் பிரகாரம் வலம்வர இயலாது தென்முகக்கடவுளை வணங்கி இரண்டாம் பிரகாரம் திருநட மாளிகைப் பத்தியில் புராண வரலாற்று ஓவியம் கண்டு வலம் வருகிறோம். மேற்கு பிரகாரத்தே வில்லேந்திய வேலவரும் தலமரம் வில்வமும் உள்ளது. மூன்றாம் பிரகார மேற்கிலிருந்து வடக்கே நோக்கி "ஐயாறா" என்றால் ஐயாறப்பரே எதிர் ஒலிப்பது போல ஏழு முறை ஒலிக்கும் அதிசயம் இன்றும் காணலாம். "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்ற அப்பர் பெருமானின் வாக்கு பொய்க்கவில்லை.

அகப்பேய் சித்தர்

இத்தலத்தின் மற்றொரு முக்கியச் சிறப்பு :

சண்டேசர் பக்கம் சித்தேசர் ஆலயம் உள்ளது. அங்குள்ள அகப்பேய்ச்சித்தர் அருளால் கரிகாற் சோழனுக்கு ஐயாறப்பர் தன் இருப்பிடம்காட்டி இத்திருக்கோயில் கட்டப்பெற்றது. ஐயாறப்பர் அருளால் இத்திருக்கோயில் மட்டுமல்ல, மக்கள் நலன்கருதி காவிரிக்குக் கல்லணை கட்டி கரையெழுப்பியவனுங்கூட. அத்தகைய பேரரசனுக்கு ஐயாறப்பர் அருளால் அரசும், நாமும் ஆண்டில் ஓர்நாள் விழா எடுத்து நன்றிக்கடனாற்ற வேண்டும். கரிகாலன் சிலை அரசமாதேவியுடன் முத்தி மண்டபத்தே உள்ளது. காண வேண்டிய ஒன்று, காணுங்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவையாறு சித்திரைப் பெருவிழா நிகழும் முறை :

திருவையாறு அருள்மிகு ஐயாறப்பரின் சித்திரைத் திருவிழா பங்குனி மிருகசீரிடத்தில் கொடியேறி சித்திரா பூரணையை அடுத்த விசாகத்தன்று ஏழூர் வலம்வரும் விழாவோடு நிறைவுறும்.

முதல் திருநாள் = கொடியேற்று விழா

திருக்கோயில் தங்கக் கொடிமரத்தின் தென்புறம் அருள்மிகு ஐயாறப்பர் ஆகிய ஓலோக வீதி விடங்கப்பெருமான் சோமாஸ்கந்தர் வெள்ளிப்படிச் சட்டத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்டு கட்டுமேடையில் அமர்ந்திருப்பார். இடபக்கொடி வீதிவலம் வந்து சிவாச்சாரியார்கள் துவஜாரோகணமந்திரத்தை மிகத் தெளிவாக அழகாகச் சொல்லி விழாத் தொடக்கமாக கொடியை ஏற்றுவிப்பார்கள். ஏராளமான மகளிர் தாம். சட்டைத்துணிகளைக் கொடுத்துக் கொடியில் கட்டச் செய்து மந்திரச் சக்தியால் நலம் பெறுவார்கள்.

இரவு அவ்வாறே வெள்ளிப்படிச் சட்டத்தே அலங்கரித்த பெருமான் வீதிவலம் வருவார். அதுபோது, விழா முடியும் வரை 10 நாட்களும் துர்தேவதைகளால் இடையூறு நேராதிருக்க மந்திரங்களால் திசைக்கட்டு கட்டுவார்கள். இதற்கு திக்பந்தனம் என்று பெயர். எட்டுத் திசைகளிலும் ஸ்வாமியை நிறுத்தி சூலபாணி மூலம் அஷ்டதிக்குப் பாலகர்களுக்குத் தனித்தனியே பூஜை செய்து, மந்திரம் சொல்லி, பலிபீடத்தில் எழுந்தருளச் செய்து, அந்தந்த தேவதைக்குரிய மந்திரம் ராகம், பதிகம், வாத்தியம், தாளம், மேளம் வாசித்துத் தீபாராதனை செய்து திசைக்கட்டு கட்டுவர். (10 ம் நாள் இவ்வாறே மந்திரம் கூறி கட்டவிழ்த்து விடுவர்). இறுதியாக இறைவன் திசையாகிய ஈசான்யத்திற்கு எழுந்தருளும்போது முட்டுக்காரன் சுத்த மத்தளமும் தாளமுமே வாசிப்பர். வாத்தியம் நிகழாது. மகாருத்ர கமனம் செய்யப் பெறு வர் மணியக்காரர் மணித்தண்டு தாங்கி முன் வருவார்.

2ம் திருநாள்	காலைப் பல்லக்கு, இரவு ஆதிசேடவாகனம்
3ம் திருநாள்	காலைப்பல்லக்கு, இரவு பூதவாகனம்
4ம் திருநாள்	காலைப்பல்லக்கு, இரவு கைலாசவாகனம், காமதேனு வாகனம் சத்திரம் மண்டகப்படி
5ம் திருநாள்	எங்கும் காணக்கிடைக்காத அற்புதக் காட்சி **தன்னைத்தான் பூஜை.** மாலை 3 மணிக்கு ஐயாறப்பரே சிவாச்சாரியார் வடிவில் அமர்ந்து **ஸ்படிகவிடங்கர்,ஸ்படிக அம்பாளுக்கு** அனைத்து அபிடேகமும் முறையாகச் செய்து வழிபடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இரவு ஆறூர் சுவாமிகளுக்கு திருமுகம் எழுதப்பெற்று அனுப்பி அவ்ஆறூர் சுவாமிகள் திருவையாறு மகேஸ்வர பூசைக்கு எழுந்தருளும்போது சண்டிகேஸ்வரர் சென்று வரவேற்று வீதிவலம் வருவர். ஐயாறப்பர் வெள்ளி ரிஷப வாகனத்தில் எழுந்தருளி ஆறூர் சுவாமிகளுக்கும் சிவிகை, பஞ்ச மூர்த்திகளுக்கு வெள்ளி ரிஷப வாகனம், மூஷிகம், மயில், கமலாசனம் சதுர் முகச் சப்பரக் காட்சி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

6ம் திருநாள் யானை வாகனம் அன்ன வாகனக் காட்சி

பாவாசாமி அக்ரகார மண்டகப்படி

7ஆம்திருநாள் மின்சார விளக்குகள் அலங்கரித்த கோரதத்தில்

காட்சி வடகிழக்கு மண்டபம் தனியார் மண்டகப்படி

8ஆம்திருநாள் குதிரை வாகனம் பல்லக்குக் காட்சி

9ஆம் திருநாள் ரத ஆரோகணம் தேரோட்டம் பஞ்சமூர்த்திகளும் தேரில் பவனிவருவர். இத்தேரோட்டம் தஞ்சை நாயக்க மன்னரான ரகுநாத நாயக்கர் (கி.பி. 1600 – 1634) காலத்தில் தேரைத் தானேச் செய்வித்து ஓட்டியதாக வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது. தேர் நிலைக்கு வந்தவுடன் ஆறூர் பல்லக்குகளும் தம் ஊருக்கு வரும் படி ஐயாறப்பரை வேண்டிச் சென்று விடும்.

10ஆம்திருநாள் காலை நடராஜர் புறப்பாடு திருவோலக்கக் காட்சி, சுவாமி மணக்கோலத்துடன் மஞ்சள் நீராடித் தீர்த்தம் கொடுத்தல் இரவுதுவஜா அவரோகணம், கொடி இறக்கி வீதிவலம் வந்து **“உள் சப்தஸ்தானம்”** சுற்றுதல்.

உள் சப்தஸ்தானமும் பிரகாரம் வலம் வருதலும்

பத்தாம் திருநாளன்று கொடி இறக்கமும் வீதியுலாவும் நடைபெறும்; திசைக்கட்டு அவிழ்ப்பர். வீதியுலா முடிவில் இறைவன் திருக்கோயிலின் மூன்றாம் பிரகாரத்தை ஏழுமுறை வலம் வருதல் நடைபெறும். இதனை ஐயாற்று மக்கள் **உள்ளூர் சத்தானம்** என்பர். வயதானவர்கள், குழந்தைகள் நோய்வாய்ப் பட்டோர், ஏழூர் செல்ல இயலாதவர்களுக்காகவே ஐயாறப்பர் ஏழூர் வலத்தைப் பிரகாரத்தே ஏழுமுறை வலம் வந்து அப்பலனைத் தருகிறார். ஒவ்வொரு சுற்று முறையும் வெவ்வேறு வகையில் நடைபெறும். (1) முதல் சுற்றில் யாவரும் மௌனமாக வலம் வருவர். (ஏழூரும் மௌனமாகவே கணவன் மனைவியர் இடைவெளியின்றி வலம் வரவேண்டு மென்பதே விதி. அதனால் இதனை மௌனப் பிரதட்சணம் என்றே அழைப்பர்). (2) இரண்டாம் சுற்றில் வேதம் ஒலிக்கும். (3) மூன்றாம் சுற்றில் தேவாரம் முழங்கும். (4) நான்காம் சுற்றில் கட்டியம் கூறும். (5) ஐந்தாம் சுற்றில் சங்கீதம் பாடும். (6) ஆறாம் சுற்றில் சின்னமேளம் இசைக்கும் நாட்டியம் நடக்கும். (7) ஏழாம் சுற்றில் நாதசுரம் வாசிக்க உள்சப்தஸ்தானம் இனிதே நிறைவுறும்.மறுநாள் “வெளி சப்தஸ்தானம்” சுற்றுதல் நடைபெறும்.

இவ்வாறே அருள்மிகு அறம் வளர்த்த நாயகியார் ஆடிப்பூர விழா 10ம் நாள் விழாவிலும் கொடியிறக்கி வீதி வலம் வந்து நேரே அலங்கார மண்டபம் செல்லாமல் அன்னை உள்பிரகாரத்தில் ஏழுமுறை சப்தபிரதட்ஷணம் செய்கிற புதுமை இத்தலத்திற்கே உரிய சிறப்பாகும். இருபால் மக்களும் அன்னை ஆலயத்தையும் 7 முறை வலம் வந்து தங்கள் குறை நீங்கப் பெறுவர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏழூர் வலம் வருவிழா (சப்தஸ்தானம்) வலம் வரும் முறை

மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் ஐயாற்றுத் தரிசனமுறை என்பதில் ஏழூர் வலம்வரும் முறையை அழகாகக் குறிப்பிடுகின்றார்கள். அதாவது

திருவையாறு

விடிய 6 நாழிகைக்கு எழுந்து புஷ்ய தீர்த்தத்தில் நீராடிக் கோயில் வந்து தக்ஷிண கயிலாயம் வந்து வணங்கிப் பிரதக்ஷிணமாக நந்தி ஸந்நிதானம் வந்து 5, 12 தரம் நமஸ்கரித்து, கோபுர வாசலின் தென்புறம் உள்ள தேவியோடு எழுந்தருளியுள்ள (கர்ணமுடி நந்தி பத்தினி) நந்திப் பிரானைப் பத்தினியைக் கொண்டு தரிசிப்பித்து தானும் தரிசித்து அபிஷ்டப் ப்ரார்த்தனம் செய்து கொண்டு ப்ரணதார்த்திஹரரைத் தரிசனம் செய்து, ஐப்பேசுவரர் ஸந்நிதியில் (தக்ஷிணாமூர்த்தி முன்) 25 தரம் ஜபித்து, சூரிய புஷ்கரணியில் ஸ்நானம் செய்து, விபூதி தரித்து; ஈர உடையோடு திருப்பழனம் வடக்குவீதி வழியாகக் கோயிலிலுள்ள ஸ்வாமி தரிசனம் செய்து, திருச்சோற்றுத்துறை வலம் வந்து, திருவேதிகுடி, திருக்கண்டியூர், பூந்துருத்தி, நெய்த்தானமாகிய தலங்களுக்கு, புருஷ பாரியைகள் நடுவில் யாரும் போகாத வண்ணம் சென்று குங்குலிய நாயனாரை (ஆட்கொண்டார்) தரிசித்து பஞ்சாக்ஷரம் ஜபம் செய்து ஐயாறப்பர்க்கு அர்ச்சனை செய்வித்துப் பிரஸாதங்களைப் பத்தினியுடன் உட்கொண்டு சிவனடியார்க்கும் உண்பித்துச் சப்தஸ்தல பிரதட்சணம் செய்ய வேண்டும் என்பது முறை என டாக்டர் உ.வே.சா. அவர்கள் கூறியுள்ள குறிப்பாகும்.

ஏழூர்த் திருவிழாவின் தொன்மை

திருவையாறு ஐயாறப்பர் சித்திரைத் திருவிழாவின் நிறைநாள் விழாவாகிய ஏழூர் வலம்வரும் விழா தெய்வீகத் திருவிழா தமிழ்நாட்டில் மட்டுமல்ல வேறு எங்குமே காணக்கிடைக்காத ஒப்பற்ற ஒரு திருவிழாவாகும். வரலாற்று முறையில் ஆராய்ந்தால் இவ்வேழூர்த் திருவிழா எப்பொழுது தொடங்கிற்று, என்று சொல்ல முடியாதபடி அத்துணைப் பழமை வாய்ந்ததாக உள்ளது. இன்றைக்கு ஏறக்குறைய 600 ஆண்டுகட்கு முன் முருகப் பெருமான் மேல் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர். மருவுலா வீடு மோதி குலைப்பவர். எனும் ஏழுதலத் திருப்புகழையே இதற்குத் தனியாகப் பாடியுள்ளார். அதில்,

"திருவின் மாமரம் ஆர் பழனப்பதி
அயிலு சோறவை ஆரு துறைப்பதி
திசையினான் மறை தேடிய முற்பதி
சிரமு மா நிலம் வீழ்தரு மெய்ப்பதி
பதும நாயகன் வாழ்பதி நெய்ப்பதி
திருவையாறுடன் ஏழு திருப்பதி பெருமாளே" என்றும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"நாதவிந்து கலாதி நமோ நம" எனும் திருப்புகழில், "ஏழ் தலம் புகழ் காவேரியால் விளை சோழ மண்டல மீதே மனோகர" என்றும் பாடியதிலிருந்து இதன் பழமையை உணரலாம்.

கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் அருளிய பல்வகைத் திருத்தாண்டகம் என்ற தலைப்பில் பத்துத் திருத்தாண்டகங்கள் உள்ளன. அதில் திருவேதிகுடி நீங்கலாக ஆறு தலங்களின் தாண்டகங்கள் தனிச் சிறப்புடையனவா யிருத்த லோடு, ஏழூர்த் தல இணைப்பின் பழமையைச் சிந்திக்கவைப் பனவாயுள்ளன.

1. ஐயாறே ஐயாறே என்பீராகில்
அல்லல்தீர் ந்தமருலகம் ஆளலாமே
2. பழனம் பழனமே என்பீராகில்
பயின்றெழுந்த பழவினைநோய் பாற்றலாமே
3. சோற்றுத்துறை சோற்றுத்துறை யென்பீராகில்
துயர் நீங்கித்தூநெறிக் கட்சேரலாமே.
4. கண்டியூர் கண்டியூர் என்பீராகில்
கடுகநும் வல்வினையைக் கழற்றலாமே!
5. பூந்துருத்தி பூந்துருத்தி யென்பீராகில்
பொல்லாப்புலால் துருத்தி போக்கலாமே
6. நெய்த்தானம் நெய்த்தானம் என்பீராகில்
நிலாவாப் புலால்தானம் நீக்கலாமே.

இவற்றிலிருந்து இவ்வேழு திருத்தலங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகத் திருநாவுக்கரசர் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தவாற்றை நன்குணரலாம். நாவுக்கரசர் இன்றைக்கு 1300 ஆண்டுகட்கு முன்பு இருந்தவர். இவ்வேழு தலங்களை அவரே வலம் வந்து பாடியுள்ளதினின்று அவர் காலத்திற்கு முன்பிருந்தே ஏழூர் வலத் திருவிழா நிகழ்ந்து வருகிறது என்பது நன்குப் புலனாகிறது. இத்திருவிழாவின் பெருமைக்கு மற்றும் இரு சான்று 1. இராசராச்சோழனின் திருச்சோற்றுத்துறைக் கல்வெட்டு பேசுகிறது. 2. ஒவ்வொரு திருத்தலத்திலும் மற்ற ஆறு தலங்களின் சிவலிங்கமூர்த்தங்கள் வழிபாட்டில் உள்ளன. எனவே, இவ்வேழூர்த் திருவிழா மிகமிகத் தொன்மை வாய்ந்த தென்பது உறுதியாகிறது.

ஏழுதலங்களுமே நவக்கிரக ஆதிக்கம் பெற்ற தலங்களாக விளங்குவது ஓர்தனிச்சிறப்பு.

திருவையாறு ஆத்மகாரன் என்று சோதிடநூல் வருணிக்கும் ஆதித்ய சேஷத்திரம் என்பதாம் அப்பர் பெருமானும் "ஆழிவலவனின் றேத்துமையாறு" என்கிறார்.

சிம்மத்தின் அதிபதி இரவி எனவே திருஐயாறு இரவியின் வாசஸ்தலம் என்பது விளங்குகிறது.

அருகில் கன்னி அதன் நாயகன் புதன், ஸௌம்யன் என்ற சகாயன் ஆபத்சகாயனாகத் **திருப்பழனத்தில்** உள்ளான். அத்தலம் புதன் தலமாகும். அடுத்து **சோற்றுத்துறை** சோதிடநூல்கள் அங்காரகனை பூமியின் புத்திரன், பூமிகாரகன் செவ்வாய் எனக்கூறும். இன்றும் ஏழூர் வலம் வரும் மக்களுக்கு அதிக அளவில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உணவு வழங்கப்படுகிறது. கன்னிராசிக்கு பிறகு விருச்சிகம். மேஷம் இந்த ராசிகளுக்கு அதிபதியாகிய செவ்வாய் ஆகும். இச்சோற்றுத்துறை, இங்கேயும் வைத்தீஸ்வரன் கோயில் போன்று பன்னிருகை வேலன் செவ்வாய் கிரகத்தின் தேவதையாக இருந்து அருள்பாலிக்கின்றான். விருச்சிகத்திற்கு அடுத்து அபஸ்வ்யகதியில் சுக்ரன் இராசியாகிய துலாம் வருகிறது. சுக்ரன் களத்திரகாரகன், திருமணம் நடைபெறக் காரணமானவன். சோற்றுத்துறைக்கு அடுத்து **திருவேதிகுடி** வருவதும் திருவருளமைப்பே.

இத்தலத்தில் ஞானசம்பந்தர் "கன்னியரொடு ஆடவர்கள் மாமணம் விரும்பி அருமங்கலமிகமின் இயலும் நுண் இடை நன் மங்கையர் இயற்றுபதிவேதிகுடியே" என்ற பாடலால் உணர்த்துகிறார். இந்த பாடலும் 7வது பாடல் களஸ்திரதானம் 7ம் இராசி என்று குறிப்பால் உணரலாம்.

இரவியின் புத்திரனாம் சனி தண்டனை கொடுப்பதில் அவனுக்கு நிகர் யாருமில்லை. எட்டு என்றாலே சனிபகவான். காவிரி தென்கரையின் பிர்மசிரக்கண்டீசனாக, அட்ட வீரட்டத்தில் ஒன்றாக திகழும் **கண்டியூர்** சனியின் க்ஷேத்திரம்.

கடகத்திலிருந்து கும்பம் வரை அமைந்துள்ள ஆறு இராசிகளின் ஸவ்யகதியில் கும்பத்தின் அதிபதி சனி அமைந்துள்ளான். அதேகதியில் மீனம் அமைந்துள்ளது. அதற்கு குரு அதிபதியாகின்றான். ஐயாற்றிற்கு நிருதி திக்கில் **திருப்பூந்துருத்தி** அமைந்துள்ளது. இது குருவின் தலமாகும். அப்பர் மடம் அமைந்ததினாலும், நாராயணதீர்த்தர் பீடம் அமைந்ததினாலும் குருதலமாக கொள்ளவாய்ப்புள்ளது.

திருநெய்தானம் இதுவே சந்திரன் தலமாகும். "சந்திரன் மனஸோஜாதஹ" என்பது வேதவாக்கு. மனத்தின் கண் மாசிலாது இருப்பது சிவயோகத்தில் இருப்பவரின் இலட்சியம். இந்த ஊர் இறைவன் நெய்யாடியப்பர், "விறகில் தீயினன் பாலில்படு நெய்போல மறைய நின்றுளான் மாமணிசோதியான்" என்ற அப்பர் வாக்கிற்கிணங்க உறவுகோல்நட்டு உணர்வு கயிற்றால் கடைய பாலில் படுநெய் போன்ற இறைவன் அருளுவான் என்ற வகையில் கிரகங்களின் அமைப்பில் ஏழூர் வலம் வருவதாக கூறுகிறார்கள்.

நந்தியெம்பெருமான் திருமணத்திற்காக திருப்பழனத்திலிருந்து பழவகைகளும், திருச்சோற்றுத்துறையிலிருந்து உணவு வகைகளும், திருவேதிகுடியிலிருந்து வேதாப்ராமணர்களும், கண்டியூரிலிருந்து திருஆபரணங்களும் திருப்பூந்துருத்தியி லிருந்து மலர்களும் திருநெய்த்தானத்திலிருந்து நெய் வந்ததாகவும் அதற்கு நன்றி செலுத்தவும். சுயசாம்பிகை உடனாய் திருநந்திதேவர் திருமண ஊர்வலமாக ஏழூர் வலம் வருவிழா நடைபெறுகிறது.

முனைவர் **குமாரசாமி தம்பிரான்,**
கட்டளை விசாரணை
தருமையாதீனம், பஞ்சநதீஸ்வரஸ்வாமி தேவஸ்தானம்,
திருவையாறு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவைகளினால் ஐயாற்று ஏழூர்த் திருவிழா மிகமிகத் தொன்மை வாய்ந்த தென்பது உறுதியாகின்றது. ஐயாற்று ஏழூர்த் திருவிழாவைப் போலவே திருச்சக்கராப்பள்ளி. கருந்திட்டைக்குடி, கும்பகோணம், அன்பிலாலந்துறை, கஞ்சனூர், திருநல்லூர், திருநீலக்குடி ஆகிய தலங்களிலும் ஏழூர்த் திருவிழா நடைபெற்று வருகின்றது. என்றாலும் திருவையாற்று விழாவைப்போல் அத்துணைப் பழமையுடன் சிறப்பாக நடைபெறுவதில்லை. இதனைக் கொண்டே அவைகள் காலத்தால் பிற்பட்டுத் தொடங்கியவை என்பதையறியலாம்.

ஏழூர்த் திருவிழாவின் நோக்கம்

புதுமணத் தம்பதிகளான நந்திகேஸ்வரரும், சுயம்பிரகாசையும் தம் திருமணத்திற்குப் பொருள் வழங்கிச் சிறப்பிக்க வந்த பெரியோர்களுக்கு நன்றி கூறி, ஆசி பெறுவதற்காகவும், அருள்மிகு ஐயாறப்பர் இத் திருமணக் குழந்தைகளைச் சுற்றிலும் உள்ள ஏழு முனிவர்களின் ஆசிரமங்களுக்கு அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்து அவர்களிடம் ஆசி பெறச் செய்வதற்காகவும் ஏழூர் வலம் வருவதாக ஐயாற்றுப் புராணம் கூறுகிறது.

சப்தஸ்தானத்தலங்களும் சப்தரிஷி ஆஸ்ரமங்கள்

சோதி கண்டியூர் துருத்திச் சோற்றுத்துறை பழனம்
வேதி நெய்த்தலம் திருவையா றேழிவை மேலும்
ஆதி காசிபன் கௌதம னங்கிரக் குற்சன்
காத லத்திரி பிருகுவார் வசிட்டனைக் கண்டு.

1. திருவையாறு – சிலாதமுனிவராஸ்ரமம்
2. திருப்பழனம் – காசிபராஸ்ரமம்
3. திருச்சோற்றுத்துறை – கௌதமாஸ்ரமம்
4. திருவேதிகுடி – வியாசராஸ்ரமம்
5. திருக்கண்டியூர் – சதாதபராஸ்ரமம்
6. திருப்பூந்துருத்தி – அத்திரி ஆஸ்ரமம்
7. திருநெய்த்தானம் – பிருகுமுனியாஸ்ரமம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



அருளகம் வெளியீடு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏழூர் வலம்வருவிழா சப்தஸ்தலயாத்திரை

சித்திரைத் திருவிழாவில் பன்னிரெண்டாம் நாள் திருவிழாவாக ஏழூர் வலம் வருவது நடைபெறுகிறது. சித்திரை முழுமதி நாளிற்கடுத்த விசாக நன்னாளில் அதிகாலை அருள்மிகு அறம் வளர்த்த நாயகியாருடன் அருள்மிகு ஐயாறப்பர் கண்ணைக் கவரும் வனப்புடைய கண்ணாடிச் சிலிகையில் ஏழூர்த் திருவுலாவிற்குப் புறப்பட்டருள்வார். மாப்பிள்ளையாகிய நந்தியெம் பெருமான். மணாட்டி சுயம்பிரகாசையுடன் (வெட்டி வேர்) விலாமிச்சை வேராலாகிய சிவிகையில் புறப்படுவார். இச் சிவிகையை மக்கள் மாப்பிள்ளைப் பல்லக்கு எனக் கூறுவர். இவ்விழாவின் தனிச்சிறப்பு. இருபல்லக்கின் அழகை அட்டைப்படத்தில் காண்க.

கண்ணாடிப் பல்லக்கும் வெட்டிவேர்ப் பல்லக்கும்

விசித்திரமான பல்லக்குகள் இவை. இதுபோல் தமிழகத்தே வேறு எக்கோயில்களிலும் காணக் கிடைக்காத ஒன்று. இதன் வடிவமைப்பே தனித்தன்மை வாய்ந்தது. மிக உயர்வாக இருக்கும். இதனைத் தஞ்சை மராட்டிய மன்னர் சிவாஜியின் மனைவி திருமதி.எச்.எம்.இராணிகௌரம்பா பாயிசாஹேப் அவர்களால் கி.பி. 1896ல் செய்து கொடுக்கப்பட்டது. திருமழபாடி செல்லும் வெட்டிவேர்ப் பல்லக்கு ஐயாறப்பர் கண்ணாடிப் பல்லக்கு, நந்திகேஸ்வரர் விலாமிச்சைவேர் பல்லக்கு ஆக மூன்று பல்லக்குகளும் அவர்களால் செய்யப்பெற்றவை. பல்லக்கின் பேரழகும் அதன் வடிவமைப்பும்: ரசம் பூசிய சதுர சதுர கண்ணாடிப் பில்லைகள் பதித்து, தங்க ரேக்குத் தாள்கள் ஒட்டப்பெற்று, நாட்டிய மகளிர் நாற்புறம் நிற்க, தேவதை எனப்படும் இறக்கை உடைய குழந்தைகள் ஏந்திவர பெரியப் பெரிய ரசக்கூண்டுகளும், தொங்குத் தொழாம்களும், சிறுசிறு மணிச் சலங்கைகளும், வண்ணமலர் வாடாமாலைகளுடனும் பேரழகாய்க் காட்சியளிக்கும். பல்லக்குத் தூக்குவோர் கட்டிக்கு 10 பேராக நாற்பது பேர் சுமந்துவருவர். இதுபோல் மூன்று குழுக்கள் மாறி, மாறி சுமந்து வருவர். அவர்கள் பாடிக்கொண்டு ஆடி, அசைத்து வரும் அழகே - அழகு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருப்பழனம்

திருச்சோற்றுத்துறை

திருவேதிகுடி

திருக்கண்டியூர்



திருப்பூந்தை

திருநெய்த்தானம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

ஐயாறன் திருவோலக்க மன்றத்திலிருந்து தீபாராதனை முடிந்து புறப்பட்டு வெளிவரும் அழகை வருணிக்க இயலாது. தெற்குக் கோபுர வாயிலிலிருந்து கீழைக் கோபுர வாயில் வழியே வெளிவரும் பொழுது கோபுர தரிசனமாக காட்டப்பெறும் பஞ்சாரத்தி கற்பூரஜோதியைத் திருவையாறகலாத செம்பொற் சோதியாகவே மக்கள் காணத் துடித்துக்கொண்டிருப்பர். பல்லாயிரக்கணக்கான மக்கள் அவ்வதிகாலையில் காவிரியில் நீராடித் திருநீறணிந்து கோயிலினுட்புறத்தே பெருகு ஆர்வமுடன் காத்திருப்பர்.

அடடா! தேவாரத் திருக்கூட்டம். பஜனைகோஷ்டிகள் எண்ணற்ற சாம்பிராணி பஞ்சாவுடன் அவரவர் குழுப் பெயருடைய கொடிகளுடன் (பேனர்) தாள ஒலியும், கஞ்ஜரா மிருதங்க ஒலியுடன் வரும் அழகே தனி அழகு. அக்காலத்தே இக்குழுவில் இராமபக்தரான ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், எம்.எம். தண்டபாணி தேசிகர், பாபனாசம் சிவன், பட்டணம் சுப்பிரமணியய்யர், மகா வைத்தியநாதய்யர், கோபால கிருஷ்ண பாரதியார் போன்றவர்கள் பஜனை கோஷ்டியாக வந்திருக்கின்றனர்.

அடியார் பெருமக்களில் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமினாதய்யர். கரந்தை தமிழவேள், உமா மகேஸ்வரம் பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கா.சுப்பிரமணிய பிள்ளை, பண்டித ந.மு.வேங்கசாமி நாட்டார் போன்ற தமிழ்ப் பேராசான்கள் பல ஆண்டுகள் தொடர்ந்து ஏழூர் வலம் வந்திருக்கின்றனர்.

பல்லக்கு, வேதியர் வேதமோதி வரவும், முன்னும், பின்னும் தேவாரப் பாராயணத் திருக்கூட்டங்களும், பல்லாயிரக் கணக்கான அடியார் குழாத்தினிடையே கடலிற் கப்பலைப்போல செல்லும் ஐயாறப்பரின் கண்ணாடிப் பல்லக்கு ஆடிக்கொண்டும், ஒளிவீசிக் கொண்டும் செல்லும் அழகை என்னவென்று சொல்வது!

திருவையாற்றின் தெற்கு வீதியிலும், மண்டகப்படிகள் (கட்டளைகள்) உள்ள சிறு தெருக்களிலும், திருவுலாப் போந்து ஐயாறப்பர் **திருப்பழனம்** நோக்கிப் புறப்படும்போது நாழிகை சுமார் பத்தாகிவிடும். ஏழூர் பெருமான்கள் அவர்வர் ஊரில் எதிர் கொண்டழைக்க, வரவேற்று பின் ஐயாற்றெம்பெருமான் இணைந்து மறுநாள் மதியம் ஏழூர் பெருமான்களும் ஒன்று சேர்ந்து திருவையாறு வந்துசேர்வர். முடிவில் ஐயாறப்பர் ஆலயத்தின் முன் கண்ணாடிப் பல்லக்கிற்கு அந்தரத்தில் உலவும் வித்தியாதரக் குழந்தை மகிழ்ச்சியுடன் பூமாலை சூட்டிவரவேற்கும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாக மக்கள் மகிழ்ந்து காண்பர். தேவர்கள் பூமாரிப் பொழிவர். இதனை பூப்போடுதல் என்பர். இதோ அக்காட்சிப் படம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருவையாறு ஐயாறப்பர் கோயிலில் நடந்த சித்திரை திருவிழா சப்தஸ்தான வைபவத்தில் ஐயாறப்பருக்கு பொம்மை பூ போடும் நிகழ்ச்சி நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஐயாறப்பர் கண்ணாடி பல்லக்கும் மாப்பிள்ளை வெட்டிவேர் பல்லக்கும் தென்வாயிலில் தெரிந்தவுடன் மக்கள் எழுப்பும் ஆரவாரம் பக்திப் பரவசத்துடன் அரகரமகாதேவா என்ற ஒலியும், சீரார் திருவையாறா போற்றி என்ற ஒலியும் வானைப் பிளக்கும்: அப்பரடிகள், ஓசை ஒலியெலாம் ஆனாய், நீயே என்று பாடியதின் உண்மைப் பொருள் விளங்கும். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அடியார்கள் கைதான் நெகிழ விடாமல், தலைமேல் குவித்துக் கதறும் பக்தர் திருக்கூட்டத்தை உண்மையில் இங்குதான் காண முடியும்.

ஏழூர்களின் இறைவன் - இறைவி திருப்பெயர்களும் தலச்சிறப்பும் :

1. திருவையாறு

அருள்மிகு அறம் வளர்த்த நாயகி உடனாய அருள்தரு ஐயாற்றெம்பெருமானொடு - சுயசாம்பிகை உடனாய திருநந்தியெம்பெருமான் திருமண ஊர்வலமாக ஏழூர் வலம் வருவர்.

தஞ்சைக்கு வடமேற்கு 11கி.மீ. **அ/மி பஞ்சநதீஸ்வரர் (ஐயாறப்பர்) கோயில்.** அப்பருக்கு சிவனார் கயிலாய காட்சியளித்த பதி. வெளியூர் சென்றிருந்த அர்ச்சகருக்காக **ஈசன் தன்னைத்தானே பூஜித்த தலம்.** கண்ணனை எடுத்துச் சென்ற வசுதேவர்க்காக யமுனாநதி வழிவிட்டதுபோல, சுந்தரர்க்கும், சேரமானுக்கும் காவிரி வழிவிட்ட பதி. சுசரிதன் என்ற பக்தனை சிவனார் தன் ஜோதிக்குள் ஆட்கொண்ட தலம். மூலவரின் தென்புறமும், வடபுறமும், தென் கயிலாயம், வட கயிலாயம் என்ற இரு கோயில்கள் உள்ளன.

ஓதி யாருமறி வாரில்லை ஓதி உலகெலாம்
சோதி யாய்நிறைந்தான் சுடர்சோதியுட் சோதியான்
வேதி யாகிவிண்ணாகி மண்ணோடு எரி காற்றுமாய்
ஆதி யாகி நின்றானும் **ஐயாறுடை ஐயனே.** - சம்பந்தர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

2. திருப்பழனம்

அருள்மிகு பெரிய நாயகி உடனாய ஆபத்சகாயர் (தேவாரம் – 6 பதிகங்கள் நால்வரும்)

திருவையாற்றின் வடகீழ் (குடந்தை வழி) 3 கி.மீ. **அ/மி ஆபத்சகாயர் கோயில். அப்பூதியடிகளின்** பெருமையை அப்பர் போற்றிய பதி. அப்பர் தொண்டாற்றிய தலம். குபேரன், திருமால், இலக்குமி பணிந்தது. கௌசிகர் தவமாற்றிய பதி. தும்பைப் பூமாலை சாற்றுவது சிறப்பு. திருநாமஜபம் செய்வதின் பயனை சீக்கிரமே அருளும் தலம். **சுதாபுஷ்கரிணி** என்ற திருக்குளம் நோயும், பாவமும் தீர்க்க வல்லது. தஞ்சை அரண்மனை நிர்வாகம் (தேவார தலம்) 613 204.

மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த இசைபாடும் **பழனம்** சேர் அப்பனை என்
கண்பொருந்தும் போதத்துங் கைவிட நான் கடவேனோ.

3. திருச்சோற்றுத்துறை

அருள்தரு அன்னபூரணி உடனாய ஓதனவனேசர் (6 பதிகங்கள் – மூவர்)

கண்டியூரின் கிழக்கு 2 கி.மீ. **அ/மி சோற்றுத்துறை நாதர் கோயில்.** பசி தீர்க்கும், பஞ்சம் தவிர்க்கும் தலம். மக்கள் பசி தீர்த்திட, திருவீழிமிழலையில் ஈஸ்வரன் நாயன்மார்களிடம் பொற்காசு வழங்கியது போல, இங்கும் இரு பக்தரிடம் **அக்ஷயபாத்திரம்** அளித்து பஞ்சக் கொடுமை தீர்த்த தலம். சப்தஸ்தானத்தில் 3வது பதி. கௌதமர் வழிபட்டது. இந்திரன், சூரியன் பூஜித்தது. (தேவார தலம்) வரப்ரஸாதியான வேலவர் சன்னதி. 613 202.

இலையால் அன்பால் ஏத்தும் அவர்க்கு
நிலையா வாழ்வை நீத்தார் இடமாம்
தலையால் தாழும் தவத்தோர் என்றும்
தொலையாச் செல்வச் **சோற்றுத் துறையே** – சுந்தரர்.

4. திருவேதிக்குடி

அருள்மிகு. மங்கையர்க்கரசி உடனாய வேதபுரீசர் (2 பதிகம் அப்பரும் சம்பந்தரும்.)

கண்டியூரின் தென்கிழக்கே 3 கி.மீ. **அ/மி வேதபுரீசுவரர் ஆலயம்.** வேதங்கள் வணங்கிய பதி. சப்தஸ்தானத்தில் 4வது. வாழை மடுவில் தோன்றிய ஈசன். சைதன்ய முனி தவமியற்றியது. பங்குனி 13,14,15ல் **சூரிய பூஜை.** வேதநாதத்தை விடாமல் கேட்பதற்காக, செவிசாய்த்திருக்கும் **வேதவிநாயகர்.** சம்பந்தர் இங்கு "பாடிய நீறுவரி ஆடரவொடாமை மனவென்பு நிறை பூண்பரிடபம்" என்று துவங்கும் பதிகத்தில் **"உன்னியிரு போதும்"** என்ற பாடலைப் பாராயணம் செய்திட, திருமணத்தை சீக்கிரமே கூட்டுவிக்கும் தலம். (தேவார தலம்) 613 202.

எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர் தாமொழியப்
பண்ணின் இசைமொழி பாடிய வானவர் தாம் பணிவார்
திண்ணென் வினைகளைத் தீர்க்கும் பிரான் **திருவேதிகுடி**
நண்ணஅரிய அமுதினை நாமடைந்தாடுதுமே – அப்பர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. திருக்கண்டியூர்

அருள்மிகு. மங்கலநாயகி உடனாய வீரட்டேசர் (2 பதிகம் இருவர் அப்பரும், சம்பந்தரும்)

திருவையாற்றின் தெற்கு 3 கி.மீ. **அ/மி பிரமசிரக்கண்டீசர் கோயில்.** சப்தஸ்தானத்தில் 5வது. சதாதப முனிவர்க்கு **காளத்தி தரிசனம் அளித்த பதி.** அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்று. பிரமனின் அகந்தையைக் களைய, அவனது 5 தலைகளில் ஒன்றை நீக்கிய தலம். தலமரம், வில்வம் கயிலையிலிருந்து கொணரப்பட்டது. மேற்குப் பார்த்தது. **மும்மூர்த்தித் தலம்.** ஆழ்வார்கள் பாடிய திவ்யதேசம். பங்குனி 13,14,15 நாட்களில் மாலை 5.45–6.10 வரை **சூரிய ஒளிபூஜை.** (தேவார தலம்) 613 202.

மாய்ந்தன தீவினை மங்கின நோய்கண் மறுகிவிழத்
தேய்ந்தன பாவம் செறுக்ககில்லா நன்மைச் செற்றநங்கைக்
காய்ந்த பிரான் **கண்டியூர்** எம்பிரான் அங்கமாறினையும்
ஆய்ந்த பிரானல்லானோ அடியேனை ஆட்கொண்டவனே – அப்பர்.

6. திருப்பூந்துருத்தி

அருள்மிகு. சௌந்தராம்பிகை உடனாய பூவனநாதர் (3 பதிகம் – நாவுக்கரசர் திருப்புகழ் – 1.)

கண்டியூரின் மேற்கு (குடமுருட்டி நதியின் தென்கரை) 3 கி.மீ. **அ/மி புஷ்பவனேசுவவர் கோயில்.** மேல்திருப்பூந்துருத்தியில் உள்ளது. சப்தஸ்தானத்தில் 6வது. **அப்பர் உழவாரப்பணி செய்தது.** அம்மண்ணை மிதிக்க அஞ்சிய சம்பந்தருக்கு சிவபெருமான், நந்தியை விலகச் செய்து காட்சியளித்தது. இந்திரனும், சூரியனும் சாபம் தீர்ந்திட்டது. வீணாதக்ஷிணாமூர்த்தி வரப்ரஸாதி. ஐயாறைப் போல, இங்கும் தென், வட கயிலாய சன்னதிகள் உள. திருவிசைப்பா அருளிய **காடநம்பி** அவதாரப்பதி. **நாராயண தீர்த்தர்** போற்றியது. சம்பந்தர் பல்லக்கை அப்பர் சுமந்த இடம் – **சம்பந்தர் மேடு** – அருகிலுள்ளது. (தேவார தலம்) 613 103.

உருவினை ஊழிமுதல்வனை ஓதிநிறைந்து நின்ற
திருவினைத் தேசம் படைத்தனைச் சென்றடைந் தேனுடைய
பொருவினை எல்லாம் துரந்தனைப் பூந்துருத்தி உறையும்
கருவினைக் கண்மூன்று டையானை யானடி போற்றுவதே – அப்பர்.

7. திருநெய்த்தானம்

அருள்மிகு. இளமங்கை உடனாய நெய்யாடியப்பர் (6 பதிகங்கள் – சம்பந்தர், நாவுக்கரசர் 5 – திருப்புகழ்) ஏழூர்த் தலங்களையும் வாழ்நாளில் கிடைத்தற்கரிய பெரும்பேறாக திருவருள் செல்வமாகக் கருதிப் போற்றி வழிபட்டு உய்வோம்.

(தில்லைஸ்தானம்) – திருவையாற்றின் மேற்கு 2 கி.மீ. சப்தஸ்தானத்தில் 7வது. **அ/மி நெய்யாடியப்பர் ஆலயம்.** பசுநெய் அபிஷேகம் சிறப்பு. காவிரியின் வடகரைத்தலம். நின்ற கோலத்தில் தக்ஷிணாமூர்த்தியும், நர்த்தன கணபதியும் கண்கவர் மூர்த்திகள். இலங்கை அரசர்க்கு குலதெய்வம். (தேவார தலம்) 613 203.

பந்தித்த சடையின் மேலே பாய்புனல் தனை வைத்து
அந்திப்போது அனலுமாடி அடிகள் ஐயாறு புக்கார்
வந்திப்பார் வணங்கி நின்று வாழ்த்துவார் வாயினுள்ளார்
சிந்திப்பார் சிந்தையுள்ளார் திருந்து **நெய்த்தானனாரே** – அப்பர்.

ஓம் சக்தி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஐயாற்று ஏழூர்த் திருவிழா போன்றே கருந்திட்டைக்குடி, திருச்சக்கராப்பள்ளி, திருநல்லூர், கும்பகோணம், திருநீலக்குடி, திருக்கஞ்சனூர் ஆகிய ஆறு ஊர்களிலும் இந்த ஏழூர்த் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அதனையும் கண்ணுறுவோம்.

2. கரந்தை - எனும் கருந்திட்டைக்குடி சப்தஸ்தான விழா எனும் ஏழூர் வலம் வருவிழா



நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன்
செம்பங்குடி நல்லக்குடி நாட்டியத்தரன்குடி
கற்குடிதென் களக்குடி செங்காட்டங்குடி
கருந்திட்டைக்குடி கடையக்குடி காணுங்கால்
விற்குடி வேள்விக்குடி நல்வேட்டக்குடி
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி
புற்குடி மாகுடி தேவன்குடி நீலக்குடி
புதுக்குடியும் போற்ற இடர்போகு மன்றே.
- திருநாவுக்கரசர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தஞ்சைக்கருகில் கும்பகோணம் செல்லும் சாலையில் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இக்காலத்தே இவ்வூரின் பெயர் கருந்தட்டாங்குடி, கரந்தை என வழங்கப்படுகின்றது.

கோயிலமைப்பு

வசிட்டர் பூசித்ததால் இறைவன் வசிட்டேசுவரர் எனக் குறிப்பிடப் படுகிறார். அம்பாள் பெயர் பெரியநாயகி, இக்கோயில் 18 அடி சதுரக்கருவறை மத்தியில் இறைவன் மகாதேவராக இலிங்க வடிவில் கருணாசாமி காட்சியளிக்கிறார். முன் அர்த்த மண்டபம், மகா மண்டபம் காணப்படுகின்றன. அர்த்த மண்டபத்தில் உற்சவ மூர்த்திகள் காணப்படுகின்றனர். மகாமண்டபத்தில் சுவாமியை நோக்கிய வண்ணம் நந்தியும், பலிபீடமும் அமைந்துள்ளன. இம்மண்டபத்தின் வலப்புறம் தெற்கு நோக்கி அம்பாள் சந்நிதி அமைந்துள்ளது. இச்சிற்றாலயமும் கருவறை, அந்தராள அமைப்புடன் விளங்குகிறது. வெளிச்சுற்றில் 4 மூலைகளிலும் சிறிய விநாயகர் சந்நதிகள் உள்ளன. தென்புறம் ஆஞ்சநேயர் சந்நதி உள்ளது.

மகாமண்டபத்தின் கிழக்கு வாயிலின் வல - இடப்பக்கங்களில் முருகன், விநாயகர் சிலை வடிவங்கள் உள்ளன. வலப்பகுதியில் நவக்கிரகங்கள், சனீசுவரன், சூரியன் ஆகியோரும், இடப்பகுதியில் சோழர்கால நர்த்தன விநாயகரும் காணப்படுகின்றார். இம்மண்டபத்தின் வலப்புறமுள்ள அம்பாள் சந்நிதி வாயிலை நோக்கி நந்தி, பலிபீடம், கொடிமரம் ஆகியன அமைந்துள்ளன. கி.பி.1613ல் இரண்டாம் சரபோஜி காலத்தில் இருந்த படைவீரர்கள் தங்கள் ஒரு மாத ஊதியத்தை வெளிச்சுற்று, தளவரிசை அமைக்க வழங்கியுள்ளனர்.

ஏறத்தாழ இரண்டு ஏக்கர் பரப்பளவுடைய இக்கோயிலில் இரண்டு திருச்சுற்றுக்கள் காணப்படுகின்றன. இக்கோயில் தலவிருட்சம் வன்னிமரம். திருக்குளம் கோயிலுக்கருகில் கிழக்குப் பகுதியில் நாற்புறமும் படித்துறையுடன் காணப்படுகிறது.

விழா நாள் :

ஆண்டு தோறும் வைகாசி மாதம் நடைபெறும் பத்துநாள் விசாகத் திருவிழாவினை அடுத்து வரும் கேட்டை நட்சத்திரத்தில் ஏழூர்த்திருவிழா இரண்டு நாட்கள் இங்கு சிறப்பாக நடைபெறுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காரணம் :

இவ்விழா **வசிட்டருக்கும் அருந்ததிக்கும்** வைகாசி மாதம் உரோகினி நட்சத்திரத்தன்று நடைபெற்ற **திருமண ஊர்வலமாகக்** கருதப்பெறுகிறது.தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்திற்குச் சொந்தமான கோயில்.

விழாவன்று இரண்டு பல்லக்குகளும் கருந்திட்டைக்குடிக் கோயிலை விட்டுப் புறப்படுகின்றன. பெரிய பல்லக்காகிய கண்ணாடிப் பல்லக்கில் வசிட்டேசுவரர், பெரிய நாயகியுடன் வீற்றிருப்பார். வெட்டிவேர்ப் பல்லக்கில் வசிட்டரும், அருந்ததியும் அமர்ந்திருப்பர். (இங்கு சமணர்களும் அவர்களது ஆலயமும் சிறப்புடையது.)



ஏழூர்த் தலங்களின் வரலாறு :

பல்லக்குகள் முறையே

1. வேலூர் (வெண்ணாற்றங்கரை) – அருள்மிகு ஜெகதாம்பாள் உடனாய அருள்தரு சதானந்தேசர்

தஞ்சையின் வடக்கு திருவையாறு வழியில் 5 கி.மீ. **அ/மி தஞ்சபுரீசுவரர் கோயில்.** கும்பகோணத்தைப் போல சைவ/வைணவக் கோயில்கள் பல அருகருகே நிறைந்த இடம். 3 வைணவ திவ்யதேசம் உடையது. அசுரன் தஞ்சகனை அழித்திட ஈசன் காளியை அனுப்பிய தலம். அக்காளி தான், அருகிலுள்ள **கோடியம்மன்.** பராசரர் தாபித்து வழிபட்ட மூர்த்தி. வில்லேந்திய வேலன் சிறப்பு. (தேவார வைப்புத் தலம்) 613 003.

2. தென்குடித்திட்டை – அருள்மிகு லோகாம்பாள் உடனாய அருள்தரு பசுபதீசர்.

தஞ்சையின் வடகீழ் 9 கி.மீ. **அ/மி வசிஷ்டேசுவரர் ஆலயம்.** ஊழிக் காலத்திலும் அழியாது திட்டாக இருந்த பதி. அச்சரபாக்கத்தில் தேர் நின்றது போல,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இங்கும் சுமாலியின் தேர் நகராமல் நின்றவிடம். **25 நிமிடத்துக்கு** ஒருமுறை விமானத்து சந்திரகாந்தக் கல்லியிருந்து **சிவபெருமான் மீது நீர் சொட்டிக் கொண்டேயிருக்கும்** அபூர்வ அமைப்புடையது. சுயம்பு மூர்த்தி. (தேவார தலம்) 613 003.

கருவினா லன்றியே கருவெலா மாயவன்
உருவினா லன்றியே உருவு செய்தானிடம்
பருவநாள் விழவொடும் பாடலோ டாடலும்
திருவினான் மிகுபுகழ் **தென்குடித் திட்டையே** – திருஞானசம்பந்தர்.

3. கூடலூர் – அருள்மிகு உமையம்மை உடனாய அருள்தரு சிவபெருமான்

தஞ்சையின் வடகிழக்கு 4 கி.மீ. **அ/மி சொக்கநாதர் கோயில்** – 613 003. (தேவார வைப்புத்தலம்)

4. கடகடப்பை – அருள்மிகு உமையம்மை உடனாய அருள்தரு சிவபெருமான்

தஞ்சையின் வடகீழ் 5 கி.மீ. (கூடலூரின் தென்கிழக்கு 3 கி.மீ.) **அ/மி ராஜராஜேஸ்வரர் கோயில்.** 613 003.

5. புன்னைநல்லூர் – அருள்மிகு உமையம்மை உடனாய அருள்தரு சிவபெருமான்

தஞ்சையின் கிழக்கு 5 கி.மீ. (கடகடப்பையின் தெ.3கி.மீ) மிகப் பிரபலமான மாரியம்மன் ஆலயத்தின் தென்புறம் **அ/மி கைலாசநாதர் கோயில்** உள்ளது. அவதூதரான சதாசிவ பிரம்மேந்திரர், மற்றும் பாடகச்சேரி சுவாமிகள் தொடர்புடைய தலம். 613 501.

6. பூமாலை – அருள்மிகு உமையம்மை உடனாய புஷ்பமாலீசர் முதலான ஊர்களுக்குத் திருவுலா வந்து மறுநாள்

தஞ்சை நகரின் கிழக்கே, பூமால் ராவுத்தர் சந்தில், வடபத்ரகாளி கோயில் அருகே, **அ/மி பூமால் வைத்தியநாதர் கோயில்.** 613 001. வந்து இறுதியாக

7. கருந்திட்டைக்குடி –அருள்மிகு பெரியநாயகி உடனாய வசிட்டேஸ்வரர் தம் திருக்கோயிலுக்கு வந்திறங்கும். விழா 1988 வைகாசி விசாகத்தோடு நின்றுள்ளது.

தஞ்சை நகரின் வட எல்லையை அடுத்தது 1 கி.மீ. **அ/மி வசிஷ்டேஸ்வரர் கோயில் கருணாசாமி கோயில்** என்று பிரசித்தம். வடவாற்றின் கரையிலுள்ளது. சில **தடுத்தாட் கொண்ட** தலங்களைப் போல, ஈசுவரன் சிலரை **துரத்தியாட்கொண்ட** அபூர்வத்தலம். ஒரு வேங்கையிடமிருந்து தப்பிட, குளத்துக்குள் குதித்த **கரிகால் பெருவளத்தானின்** குட்ட நோயை சிவனார் போக்கிய பதி. நோய் நீக்கும் சூர்யபுஷ்கரிணி தீர்த்தம். மார்கழி ஸ்நானம் மிகுசிறப்பு. அம்மனை தன் வலப்புறத்தில் கொண்ட அற்புத அர்த்த நாரீசுவரர் சன்னதி. (தேவார வைப்புத்தலம்) 613 002.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

3. சக்கராப்பள்ளி - சப்தஸ்தான விழா (ஏழூர் வலம் வருவிழா)



தஞ்சாவூர் – கும்பகோணம் சாலையில் உள்ள தலம். திருமால் வழிபட்டுச் சக்கராயுதம் பெற்றதலம்.

இறைவன் – சக்கரவாகேஸ்வரர்

இறைவி – தேவநாயகி

சயந்தனும் – தேவர்களும் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. இன்று கோயிலைச் சுற்றி இஸ்லாமியர்கள் குடியிருப்பு மிகுதியாகவுள்ளன. திருக்குளத்தை அடுத்து கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. **இக்கோயில் சுவாமிமலை தேவஸ்தானத்தோடு இணைந்தது.**

காவிரி தென்கரைத்தலங்கள் 127ல் 17 வது தலம்.

படையினார் வெண்மழுப்பாய் புலித்தோல் அரை
உடையினார் உமையொரு கூறனார் ஊர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினார் உறைவிடம் சக்கரப் பள்ளியே.

- சம்பந்தர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தஞ்சாவூர் – கும்பகோணம் சாலையில் ஏறத்தாழப் பதினாறு கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. அய்யம்பேட்டைக்கு அருகிலுள்ள காவிரித் தென்கரைச் சிவத்தலங்களுள் இதுவும் ஒன்று.

கோயிலமைப்பு

இக்கோயில் இறைவன் பெயர் சக்கரவாகேசுவரர். இறைவி தேவநாயகி. கருவறையில் மூலவர் இலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். கருவறை முன்பு அந்தராளமும் அதன் வாயிலில் துவாரபாலகர் வடிவங்களும் காணப்படுகின்றன. அந்தராளம் முன் ஸ்தபன மண்டபம், அர்த்த மண்டபம் அமைந்துள்ளன. அர்த்த மண்டபத்தின் இடப்புறம் இலிங்கமும், சூரியனும், வலப்புறம் சந்திரன், நால்வர் ஆகியோர் வடிவங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இறைவன் சந்நிதி வாயில் முன்பாக அம்பாளுக்குத் தனிச் சந்நிதி ஒன்றுள்ளது. இக்கோயிலும் கருவறை, அர்த்தமண்டபம், முகப்பு மண்டபத்துடன் காட்சியளிக்கிறது. அம்பாள் கோயிலுக்கு எதிராக மணிமண்டபம் உள்ளது.

ஒரு திருச்சுற்றுடன் விளங்கும் திருச்சக்கராப்பள்ளிக் கோயில் வாயிலின் உள்பகுதியில் நந்திக்குத் தனி மண்டபம் உள்ளது. கோயில் தலவிருட்சம் வில்வமரம். திருக்குளம் கோயிலுக்கு வெளியே வடபுறம் உள்ளது. கோயிலின் பரப்பு சுமார் இரண்டரை ஏக்கர் இருக்கும்.

விழா நாள் :

இங்கமைவுற்ற கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் பத்துநாள் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பத்தாம்நாள் நிறைவுற்றுப் பன்னிரண்டாம் நாள் சித்திரை நட்சத்திரத்தன்று ஏழூர்த் திருவுலா நிகழும்.

காரணம் :

பாசமொழிந்த பதியை அடைய விரும்பி **அநவித்யநாதசர்மா** என்பவர் தன் இல்லக்கிழத்தி அனவித்யையுடன் ஒவ்வொரு நாளும் சப்த மங்கையர்கள் வழிபட்ட ஏழூர்களுக்கும் சென்று பூசை செய்து வீடுபேறடைந்ததாகக் கருதப்படுகிறது. அந்நிகழ்ச்சியைக் குறித்துச் சிவபெருமான் தொன்று தொட்டுத் திருச்சக்கராப்பள்ளியில் எழுந்தருளி ஏனைய ஆறு ஊர்களுக்கும் சென்றருள்கின்றார்.

விழாவன்று பெரிய கண்ணாடிப்பல்லக்கு ஒன்றும், வெட்டிவேர்ப் பல்லக்கு ஒன்றும் சக்கராப்பள்ளியில் இருந்து புறப்படுகின்றன. **கண்ணாடிப் பல்லக்கில்** சக்கரவாகேசுவரர் தேவநாயகியுடன் வீற்றிருக்க, வெட்டிவேர்ப் பல்லக்கில் அநவித்யநாதர், அனவித்யையுடன் வீற்றிருப்பார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஏழூர் வழிபாடு : சக்கராப்பள்ளி சப்தஸ்தானம்

நாத சன்மா மனைவி அனவித்யையுடன் நாளும் ஏழூர் சென்று வழிபட்டு வீடுபேறு அடைந்தார். அத்துடன் இவை சப்த மாதர் தலங்களும் கூட.

1. சக்கராப்பள்ளி : அருள்மிகு அல்லியங்கோதை (சக்கரமங்கை) உடனாய அருள்தரு சக்கரவோகேசர் திருக்கோயில். சம்பந்தர் பதிகம் 1 **இங்கு பிராமியும்.**

(அய்யம்பேட்டை) சக்கரமங்கை தஞ்சையின் வடகீழ் 13 கி.மீ. **அ/மி சக்ரவாகேஸ்வரர் ஆலயம்.** திருமால் சிவனாரை பூஜித்து சக்ராயுதம் பெற்ற பதி. சக்கரவாகப்பறவை முக்தி பெற்றது. உத்திரமேரூர் சிலாசாசனங்களைப் போல. கிராம நிர்வாகம் பற்றிய செய்திகள் தெரிவிக்கும் கல்வெட்டுக்கள் உள்ளன. (தேவார திருப்புகழ் தலம்) 614 211.

மின்னினார் சடைமிசை விரிகதிர் மதியமும்
பொன்னினார் கொன்றையும் பொறிகிளர் அரவமும்
துன்னினார் உலகெலாம் தொழுதெழ நான்மறை
தன்னினார் வளநகர் **சக்கரப் பள்ளியே** - சம்பந்தர்.

2. அரியமங்கை : (வையச்சேரி) சிவன், உமை அமர்திருக்கோயில் (அப்பர் வைப்பு)

ஐயம்பேட்டையின் தென்கிழக்கே 2 கி.மீ. **அ/மி அரிமுக்தீசுவரர் கோயில்.** சப்தமாதர் சன்னதி விசேஷம். **இங்கு மாகேஸ்வரியும்**

3. சூலமங்கை : (சூலமங்கலம்) அ.மி. அலங்காரியம்மை உடனாய அ.மி.கிருத்திவாலேசர் – திருக்கோயில். (அப்பர் வைப்பு) **இங்கு கௌமாரியும்**

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சக்ரபள்ளியின் தென்கீழ் 3 கி.மீ. (பசுபதி கோயில் ரயில் நிலையம் அருகே) **அ/மி கீர்த்திவாகேஸ்வரர் கோயில்.** சிவனாரின் ஆயுதமாகிய, அஸ்திரதேவர் பணிந்த பதி. **தை மாதம் செவ்வாய்க்கிழமை** தீர்த்தமாடி தரிசித்தல் சிறப்பு (தேவார வைப்புத் தலம்) 614 206.

4. நந்திமங்கை : (நல்லிச்சேரி) அ.மி.அகிலாண்டேஸ்வரி உடனாய அ.மி.ஜம்புநாதேசர் திருக்கோயில் **இங்கு வைணவியும்**

அய்யம்பேட்டையின் மேற்கு 2 கி.மீ. **அ/மி சம்புநாதர் கோயில்.** 614 206.

5. புள்ளமங்கை : (பசுபதிகோயில்) அ.மி.பால்வண்ண நாயகி உடனாய அ.மி.பசுபதீசுவரர் திருக்கோயில். (சம்பந்தர் பாடல்) **இங்கு வராகியும்**

அ/மி பசுபதீசுவரர் கோயில். அய்யம்பேட்டையின் வடமே 2 கி.மீ. சோழர்காலம். அமுதம் வருமுன்பு, பாற்கடலில் வந்த **ஆலகால விஷத்தை சிவனார் உண்டு அருளிய பதி.** குடமுருட்டி ஆற்றின் கரையிலுள்ளது. நவக்ரகங்களுக்கு இடையில் நந்தி. மகிஷனை அழிக்கும் கோலத்தில் துர்க்கை பிரசித்தம். பெயரில் புள்ள என்பதற்கு ஏற்ப, கோபுரத்தில் இன்றும் கழுகுகள் வசிக்கின்றன. (தேவாரதலம்) 614 206.

மன்னானவன் உலகிற்கொரு மழையானவன் பிழை இல்
பொன்னானவன் முதலானவன் பொழில்சூழ் **புளமங்கை**
என்னானவன் இசையானவன் இளஞாயிறின் சோதி
அன்னானவன் உறையுமிடம் ஆலந்துறை அதுவே - சம்பந்தர்.

அநவித்யநாத சர்மா என்பவர் தினமும், **சப்த மங்கையர்** பூஜித்த ஏழு தலங்களையும் தரிசித்ததின் தொடர்ச்சியே. **பங்குனி, சித்திரை நக்ஷத்ரத்தில்** நடைபெறும் ஏழூர் விழா.

6. தாழமங்கை : (ஐயம்பேட்டை) அ.மி.உமைஉடனாய சிவன்கோயில். **இங்கு மகேந்திரியும்**

ஐயம்பேட்டையின் வடமேற்கு தஞ்சை சாலையில் 3 கி.மீ. **காசி விசுவநாதர், பிரம்மபுரீசுவரர், அ/மி சந்திரமௌளீசர் கோயில்கள்.** 614 206.

7. பசுமங்கை : (குண்டாங்கோரை) அ.மி.லோகநாயகி உடனாய அ.மி.கைலாச பசுபதீசர் திருக்கோயில். (சுந்தரர் வைப்பு) **இங்கு சாமுண்டியும்** ஆக எழுவரும் ஆதிபராசக்தியின் அருள்வடிவங்களாகத் திகழ்கின்றனர்.

ஐயம்பேட்டையின் தென்மேற்கே 1 கி.மீ. **அ/மி பசுபதீசர்** மற்றும் **காசி விசுவநாதர் கோயில்கள், மாடக்கோயிலாக உள்ளன.** 614 201.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

4. திருநல்லூர் - சப்தஸ்தான விழா (ஏழூர் வலம் வருவிழா)



திருநல்லூர் பஞ்சவர்ணேஸ்வரர் ஆலயத்தின் கோபுரத் தோற்றமும், தீர்த்த குளமும்

திருநல்லூர் : காவிரித் தென்கரைத் தலங்கள் 127ல் 20வது தலம்.

இறைவன் : பஞ்சவர்ணேசுவரர்

இறைவி : பர்வத சுந்தரி

பதிகம் : சம்பந்தர் 3, நாவுக்கரசர் 2

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்கவைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்துவானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறதுற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனைந்தனைய திருவடி என்தலைமேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே

- அப்பர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தஞ்சை – கும்பகோணம் சாலையில் சென்று பிரிகிற வலங்கைமான் சாலையில் 2 கி.மீ. தொலைவில் உள்ள தலம் திருநல்லூராகும். இங்கே பழமையான ஒரு சிவன்கோயில் இருக்கிறது. சுவாமிக்கு பஞ்சவர்ணேசுவரர் என்று பெயர். ஒரு நாளில் ஆறு நாழிக்கு ஒருமுறை அதாவது ஐந்துமுறை சுவாமி நிறம் மாறுவதால் இவருக்கு பஞ்சவர்ணேசுவரர் என்று பெயர். **அகத்தியருக்குத் திருக்கல்யாணம் காட்டியதலம்** இது. அம்பாளுக்கு பர்வத சுந்தரி என்று பெயர். திருநாவுக்கரசருக்கு (அப்பர் சுவாமிகள்) சிவபெருமான் தன் திருவடிகளைச் சூட்டித் திருவடி தீட்சை தந்த தலம். இங்கு அதன் நினைவாக வணங்கும் அன்பர்களுக்குத் தலையில் (பெருமாள் கோயில் சடாரிபோல) சிவன் திருவடி சூட்டும் பழக்கம் இங்கு மட்டுமே காணலாம். கோச்செங்கட் சோழனால் கட்டப்பெற்ற மாடக்கோயில்.

கோயிலுக்கு முன்னால் ஒரு குளம் இருக்கிறது. அக்குளத்திற்குச் சப்த சாகர தீர்த்தம் என்று பெயர். இது மிகவும் பெருமை வாய்ந்த குளம். இத்தீர்த்தத்தில் நீராடினால் எல்லா விதமான உடல் வியாதிகளும் நீங்கும் என்பர். குந்திதேவி தனக்கு உபதேசித்த மந்திரத்தை கன்னியாக இருந்த நேரத்தில் பிரயோகம் செய்தார். அவளுக்குக் கர்ணன் பிறந்தான். இக்குழந்தையை அவள் ஒரு பெட்டியில் வைத்து நட்டாற்றில் விட்ட பாவத்தை – இங்கு வந்து முனிவர் அருளால் இக்குளத்தில் மூழ்கி பாபவிமோசனம் பெற்றாள். மாசி–மகம் தீர்த்தம் – **இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது. 63வரில் அமர்நீதி நாயனார் வாழ்ந்த தலம்.** குந்திதேவிக்குச் சிலை உள்ளது.

கோயிலமைப்பு

இக்கோயில் இறைவனின் பெயர் கல்யாணசுந்தரர். நாயகி பெயர் கிரிசுந்தரி. பதினான்கு அடி உயரம் உடைய மூலஇலிங்கம், மிகவுயர்ந்த விமானத்துடன் கிழக்கு நோக்கியும், அம்மையார் கிரிசுந்தரி சற்றுச் சிறிதாய் அமைந்த விமானத்துடன் தெற்கு நோக்கியும் அமைந்துள்ளன. இரு சந்நிதிகளுக்கும் வாயில், முதல் திருச்சுற்றின் தென்பக்கம் கிழக்கு நோக்கிக் காணப்படுகிறது.

இக்கோயில் இரண்டு திருச்சுற்றுக்களுடன் விளங்குகிறது. கோயில் வாயில் எதிரே திருக்குளம் அமைந்துள்ளது. கோயில் தலவிருட்சம் வில்வ மரம். கோயில் சுமார் மூன்று ஏக்கர் பரப்பளவுடையது.

விழாக் காரணம் :

சிவபிரான் திருமணம் புரிந்து கொள்ளும் காட்சியைக் காண்பதற்காக மக்களனைவரும் வடதிசை சென்றமையால் பெரும்பாரத்தால் கயிலை தாழவே, தென்திசை உயர்ந்தது. இதனைத் தென்திசைக்குச் சென்று நின்று சமப்படுத்துமாறு பெருமான் தமிழ் முனிவர் அகத்தியருக்குக் கட்டளையிட, அதற்கு அவர் திருமணக் காட்சியைக் காணும் வாய்ப்புத் தமக்கு வாய்க்கப் பெறாமல் போவதைக் கூறினார். பெருமான் பின்னர் அக்காட்சியை அவ்வாறே காட்டுவதாகக் கூறி, **இவ்விடத்தில் அகத்தியருக்கு திருமண காட்சியைக் காட்டியருளினார். அதன் நினைவாகவே அக்தியருடன் பெருமான் ஏழூர்களுக்கும் மண ஊர்வலமாகவும் செல்கின்றார்.**

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விழா நாள் :

பல்லக்குகள் வைகாசி மாதம் விசாகம் நட்சத்திரத்தன்று திருநல்லூரிலிருந்து புறப்படும். பெரிய கண்ணாடிப் பல்லக்கில் கல்யாணசுந்தரர், கிரிசுந்தரி பாளுடன் அமர்ந்திருப்பார். வெட்டிவேர்ப் பல்லக்கில் அகத்தியர் அமர்ந்திருப்பார். இப் பல்லக்குகள் இரண்டும் ஏழூர்கள் வலம் வருகின்றன.



ஏழூர் வழிபாடு : திருநல்லூர் சப்தஸ்தானம்

அகத்திய முனிவர், இறைவன், இறைவி திருமணக் கோலம் காண ஏழூர் செல்லுதல்.

1. திருநல்லூர் : அருள்மிகு. கிரிசுந்தராம்பிகை உடனாய அருள்தரு. கல்யாணசுந்தரேசர் (பஞ்சவர்ணேசர்) பாடல் : சம்பந்தர் 3, அப்பர் 2

2. கோவிந்தக்குடி : அருள்மிகு.உமையம்மை உடனாய அருள்தரு சிவன் திருக்கோயில்.

3. ஆவூர் : அருள்மிகு.மங்களநாயகி உடனாயபசுபதீசர் திருக்கோயில், பாடல் : சம்பந்தர்.

4. ஒரி மணத்திடல் : அருள்மிகு.உமையம்மை உடனாய சிவன் திருக்கோயில்

5. மாளிகைத்திடல் : அருள்மிகு.உமையம்மை உடனாய சிவன் திருக்கோயில்

6. மட்டியாந்திடல் : அருள்மிகு.உமையம்மை உடனாய சிவன் திருக்கோயில்

7.மருத்துவக்குடி : அருள்மிகு.உமையம்மை உடனாய சிவன் திருக்கோயில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. கும்பகோணம் - சப்தஸ்தான விழா (ஏழூர் வலம் வருவிழா)



கும்பகோணம் : காவிரித் தென்கரைத்தலங்கள். 127ல் 26வது தலம்.

பூவணத்தவன் புண்ணியன் நண்ணியங்(கு)
ஆவணத் துடை யானடியார் களைத்
தீவணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவணத் துடை யான்குட மூக்கிலே.
- அப்பர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. திருக்குடமூக்கு (கும்பகோணம்)

தஞ்சாவூர் மாவட்டத்தில் கலைக்களஞ்சியமாக விளங்கும் கோயில்களைத் தன்னகத்தே கொண்டது இவ்வூர். இது கும்பகோணம், குடந்தை என இக்காலத்தே வழங்கப்படுகிறது. குடந்தையும், காஞ்சியும் கோயில் நகரமென்றே கூறுவர். இந்நகருக்கு வடபால் காவிரி நதியும், தென்பால் அரசலாறும் மாலை அணிந்தது போல் விளங்கும் நதிக்கரை நகரமாகவுள்ளது.

கோயிலமைப்பு

கும்பகோணம் நகரத்திலேயே ஆதிகும்பேசுவரர் கோயில் மிகப்பெரிய அமைப்பில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய வாயிலுடையது. இராசகோபுரம் ஒன்பது நிலைகளைக் கொண்டிலங்குகிறது. கோயிலுக்குள் மூன்று திருச்சுற்றுக்கள் காணப்படுகின்றன. கருவறையில் ஆதிகும்பேசுவரரும், தெற்கில் சோமாஸ்கந்த மூர்த்தியும், வடக்கில் மங்களாம்பிகையும் தனித்தனியாக எழுந்தருளியுள்ளனர். தெற்கு வாயிலுக்குக் கோபுரமில்லை. ஏனைய மூன்று வாயில்களும் கோபுரங்களைப் பெற்றுத் திகழ்கின்றன.

இக்கோயிலை மூன்று திருச்சுற்றுக்கள் பெருமைக் குள்ளாக்குகின்றன. மூன்றாம் திருச்சுற்றின் வடக்குப் பகுதியில் திருக்குளம் காணப்படுகிறது. இக்கோயில் தலவிருட்சம் வன்னிமரம். கோயில் பரப்பு ஏறத்தாழ 30, 187 சதுர அடியாகும்.

விழாநாளும், காரணமும் :

ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் விசாகம் நட்சத்திரத்தன்று கும்பேசுவரர் கோயிலில் ஏழூர்த் திருவிழா நடைபெறுகிறது. **இவ்விழா விநாயகருக்கும் சித்திக்கும் நடைபெற்ற திருமண ஊர்வலமாக அமைந்துள்ளது. திருமணத்தம்பதிகள் இருவரும் ஏழூர்களுக்கும் மண ஊர்வலம் சென்று வருவதே இவ்விழாவின் சிறப்பு.**

விழாவன்று பெரிய கண்ணாடிப் பல்லக்கில் கும்பேசுவரர், மங்களாம்பிகையும், சிறிய கண்ணாடிப் பல்லக்கில் விநாயகரும், சித்தியும் அமர்ந்திருப்பர்.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏழூர் வழிபாடு : திருக்குடந்தை சப்தஸ்தானம்

1. திருக்குடமூக்கு (கும்பகோணம்) : அருள்மிகு. மங்களாம்பிகை உடனாய அருள்தரு. கும்பேசர் திருக்கோயில். பாடல் : சம்பந்தர், அப்பர்

தஞ்சையின் வடகீழ் 40 கி.மீ. காஞ்சிக்கு அடுத்ததாக கோயில்கள் அதிகமாக உள்ள தலம். **அ/மி கும்பேசர் கோயில்**. அமுதமும் மணலும் கலந்திட்ட சிவலிங்கம். ஆறுமுகம் கொண்ட முருகனுக்கு 6 கைகள் மட்டுமே உள்ள அபூர்வ மூர்த்தி. உலகப்ரசித்தி பெற்ற மகாமகக் குளமுடையது. **கோவிந்த தீக்ஷிதர்** திருப்பணி செய்த பதி. **மூர்க்க நாயனார்** அவதாரப் பதி. ஒரு பிரளய காலத்துக்குப் பின் அமுத குடத்தின் மூக்குப்பகுதி விழுந்த தலம். (தேவார திருப்புகழ் தலம்) 612 001.

தொண்டராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்
விண்டவர்புரம் மூன்றொரு மாத்திரைக்
கொண்டவன் உறையும் **குடமூக்கிலே** – அப்பர்.

2. திருக்கலயநல்லூர் : அருள்மிகு.அமிர்தவல்லி உடனாய அருள்தரு. அமிர்தகலேசர் திருக்கோயில். சுந்தரர் பதிகம்–1

குடந்தையின் தென்கீழ் மன்னார்குடி வழி. 4 கி.மீ. **கோட்டை சிவன் கோயில்** என்ற **அமிர்தகடேசுவரர் ஆலயம்**. கோட்டையின் இடிபாடுகளே உள்ளன. ஒரு பிரளயத்தின் போது உயிர்கள் எல்லாம் பாதுகாப்பாக இருந்த கலயம் தங்கிய பதி. தக்ஷிணாமூர்த்தி லிங்கோத்பவர், அர்த்தநாரி, மற்றும் **தபஸ்வியம்மன்** சிறப்பு. (தேவாரத்தலம்) 612 401.

இண்டை மலர் கொண்டு மணல் லிங்கமது வியற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறிய தாதையைத் தாள்
துண்டமிடு சண்டியடி அணடர் தொழுதேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கனதூர் வினவில்
மண்டபமும் கோபுரமும் மாளிகை சூளிகையும்
மறைஒலியும் விழவொலியும் மறுகுநிறை வெய்திக்
கண்டவர் கண்மனங்கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்தாடுங் **கலயநல்லூர் காணே** –சுந்தரர்.

3. திருவலஞ்சுழி : அருள்மிகு.நித்தியானந்த நாயகி உடனாய அருள்தரு. கற்பகேசர் திருக்கோயில். (பாடல் பதிகம் –5)

குடந்தையின் மேற்கே 6 கி.மீ. அ/மி வலஞ்சுழிநாதர் கோயில். தேவேந்திரன் பூஜித்த தலம். காவிரி வலஞ்சுழித்துப் பாயும் பகுதி. கடல் நுரையால் இந்திரன் தாபித்த. பிரசித்தமான **வெள்ளை விநாயகர்** அருளும் தலம். மகாசிவராத்ரியன்று ஆதிசேஷன் வணங்கும் தலங்களில் ஒன்று. **அஷ்டபுஜகாளியும் பைரவரும் சிறப்பு. பூமியில் ஆழ்ந்து விட்ட காவிரியை, ஏரண்ட முனிவர் மீண்டும் நமக்கு அழைத்து வந்த தலம்.** (தேவார திருப்புகழ் தலம்) 612 302.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரிசூழ் **திருவலஞ்சுழி** வாணனை வாயாரப்
பன்னியாதரித்து ஏத்தியும்பாடியும் வழிபடும் அதனாலே – சம்பந்தர்.

4. தாராசுரம் : அருள்மிகு.பெரியநாயகி உடனாய அருள்தரு.ஐராவதீஸ்வரர் திருக்கோயில்

குடந்தையின் தெ.மே. 2 கி.மீ. **அ/மி ஆவுடைநாதர், அ/மி காசி விசுவநாதர், அ/மி ஐராவதேசர் கோயில்.** ஐராவதம் தன் வெண்மை நிறம் மீளப் பெற்ற பதி. **தாரன் வழிபட்டது.** எமன் வெப்பு நோய் தீர்ந்தமை. கற்றளியில் **சிற்பக் களஞ்சியம்.** ஆலயத்தில் **ஒவ்வொரு அங்குலமும் அற்புதச் சிற்பம் உடையது.** இரண்டாம் ராஜ ராஜ சோழனையும், ஒட்டக்கூத்தரையும் போற்றச் செய்யும் தலம். 'இராஜராஜபுரம்' தாராசுரமாகி விட்டது. 612 702.

ஒரு மருங்குடைய மூலநாயகி ஒற்றை வெள்விடை ஊர்திமேல்
இருமருங்கு மறை தொழ எழுந்தருள் **இராச ராசபுரி ஈசனே.**

5. சுவாமிமலை : அருள்தரு.மீனாட்சி உடனாய அ.மி.சொக்கநாதர் திருக்கோயில். திருப்புகழ்.

குடந்தையின் தெ.மேற்கு 6 கி.மீ. **அ/மி மகாலிங்கசுவாமி கோயில்.** முருகனின் அறுபடைவீடுகளில் ஒன்று. பிரணவ விளக்கம் அருளப்பட்ட தலம். குட்டநோய் தீர்க்கும் தலம். (திருப்புகழ் தலம்) 612 302.

6. கொட்டையூர் : அருள்மிகு.பந்தாடு நாயகி உடனாய அ.மி. சொக்கநாதர் திருக்கோயில். பாடல் : அப்பர் –1

குடந்தையின் வடகீழ் சுவாமிமலை வழி 3 கி.மீ. **அ/மி கோடீஸ்வரர் ஆலயம்.** பத்திரியோகி முனிவர்க்கு **சிவபெருமான் கோடிவடிவமாக தரிசனம்** அளித்த பதி. கோடி தலங்கள் வழிபட்ட பலனை அளிப்பது. **எச்செயலுக்கும் கோடி பங்கு பலன்** கொடுக்கும் தலம். இதனால் '**கொட்டையூரில் செய்த பாவம் கட்டையோடே**' என்ற பழமொழி. (தேவார திருப்புகழ் தலம்) 612 002.

கருமணி போல் கண்டத்தழகன் கண்டாய்
கல்லால் நிழற்கீழ் இருந்தான் கண்டாய்
பருமணிமா நாகம் பூண்டான் கண்டாய்
பவழக் குன்றன்ன பரமன் கண்டாய்
வருமணிநீர்ப் பொன்னி வலஞ்சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய், வரதன் கண்டாய்
குருமணி போல் அழகமருங் **கொட்டையூரிற்**
கோடீசுரத் துறையும் கோமான் தானே – நாவுக்கரசர்.

7. மேலக்காவேரி : அருள்மிகு.உமையம்மை உடனாய அருள்தரு. சிவபெருமான் திருக்கோயில்.

கும்பகோணம் ரயில்நிலையம் அருகே **அ/மி கைலாசநாதர், அ/மி சங்கரநாராயணர்** மற்றும் **பிரம்மபுரீசர்** கோயில்கள். – 612 002.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

6. திருநீலக்குடி - சப்தஸ்தான விழா (ஏழூர் வலம் வருவிழா)



திருநீலக்குடி : தென்கரைத்தலங்கள். 127ல் 32வது தலம்.

கல்லினோடு எனைப்பூட்டி அமண்கையர்
ஒல்லைநீர் புகநூக்க என்வாக்கினால்
நெல்லுநீள் வயல்நீலக் குடிஅரன்
நல்லநாமம் நவிற்றி உய்ந்தேன் அன்றே.
- அப்பர்.

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டத்தில் திருநீலக்குடி அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்லும் சாலையில் பதினான்கு கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. இக்காலத்தில் **தென்னலக்குடி** என வழங்கப்படுகிறது. பாற்கடலில் அமுது கடைந்த காலத்தில் தோன்றிய நஞ்சை உண்டு இறைவன் நீலகண்டராக விளங்கும் தலமாதலின் திருநீலக்குடியாயிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோயிலமைப்பு

திருநீலக்குடி இறைவன் பெயர் மனோக்கியநாதர். இறைவி பெயர் அநுபமஸ்தநி அம்பாள். மூலவர் கருவறை வாயில் இருபுறமும் துவாரபாலகர் வடிவங்கள் காணப்படுகின்றன. கருவறை முன்பாக அந்தராளம், ஸ்தபன மண்டபம் அமைந்துள்ளன. ஸ்தபன மண்டப வாயில் வல - இடப் பகுதிகளில் சுப்பிரமணியர், விநாயகர் காணப்படுகின்றனர். ஸ்தபன மண்டபம் முன் அர்த்த மண்டபம் காட்சியளிக்கிறது. இம்மண்டபத்தின் வலப்புறம் நவக்கிரகங்கள், பைரவர் சிலையும், இடப்புறம் சூரியனும் பிரம்மலிங்கமும் காணப்படுகின்றன.

இக்கோயிலின் கிழக்குப் பக்கத்தில் மட்டுமே வாயில் அமைந்துள்ளது. வாயிலின் முன்பாகத்தில் திருக்குளம் அமைந்துள்ளது. கோயில் பரப்பளவு சுமார் இரண்டரை ஏக்கர் இருக்கும். இத்தலத்தின் விருட்சமாக **பஞ்ச வில்வமரம் புதுமை.** அதனால் பஞ்சவில்வரன்ய க்ஷேத்திரமாகும்.

விழா நாள் :

இங்கு ஆண்டுதோறும் சித்திரை மாதம் நடைபெறும் பத்துநாள் திருவிழா முடிந்த இரண்டாம் நாள் விசாகத்தன்று ஏழூர்த் திருவிழா நடைபெறுகிறது.

காரணம் :

மார்க்கண்டேயர் வழிபட்டதலமாதலின் அவர் ஏழூர் வழிபாடு செய்யும்பொருட்டு மனோக்கிய நாதரும், அநுபமஸ்தநி அம்பாளும் மார்க்கண்டேயருடன் முத்துப் பல்லக்கில் ஏழூர்களையும் உலா வருகின்றனர்.

ஏழூர்கள்

சித்திரை மாதம் விசாகம் நட்சத்திரத்தன்று பல்லக்குத் திருவுலா தொடங்குகிறது. பல்லக்கு முறையே 1. இலந்துறை, 2.ஏனாதிமங்கலம், 3.திருநாகேசுவரம், 4.திருபுவனம், 5.திருவிடைமருதூர், 6. மருத்துவக்குடி சென்று மீண்டும் 7.திருநீலக்குடி வந்தடைகிறது. இத்திருக்கோயில் **திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும்.**

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஏழூர் வழிபாடு : திருநீலக்குடி சப்தஸ்தானம்

மார்க்கண்டேயர் ஏழூர் வழிபாடு செய்துவீடுபேறடைதல் காரணம்.

1. திருநீலக்குடி (தென்னலக்குடி) : அருள்மிகு. சுந்தராம்பாள் உடனாய அருள்தரு.நீலகண்டேசர் திருக்கோயில்.

திருவிடைமருதூரின் தென்கீழ் 4 கி.மீ. **அ/மி மானோக்கிநாதர் ஆலயம்.** திருவாவடுதுறை ஆதீன நிர்வாகம். **காலகண்ட சிவன், விஷமுண்டதால் நீலகண்டன் ஆனது.** விஷமுண்ட சிவனின் உடலுஷ்ணத்தை தணிக்க எண்ணி, அம்பிகை அவருக்கு தைலாபிஷேகம் செய்வித்த பதி. **அபிஷேகிக்கும் எண்ணை, ஒரு சொட்டு கூட, கீழே, வெளியே வழியாமல் உட்சென்று விடும் அபூர்வ சுயம்பு லிங்கம்.** காமதேனு, பிரமன் மற்றும் பலர் பேறு பெற்ற பதி. சிற்றாயுள் மட்டுமே பெற்ற, மார்க்கண்டேயர் இங்கு வழிபட்டு சிரஞ்சீவித்தன்மை அடைந்த பதி, பிரமிக்க வைக்கும் பிரம்மாண்டமான பலாமரத்தின் பழம் சிவனுக்குப் படைத்தால் மட்டுமே ருசிக்கும். படைக்கத் தவறினால் அழுகிடும். (தேவாரத்தலம்) 612 108.

கல்லினோடு எனைப்பூட்டி அமண்கையர்
ஒல்லைநீர் புகநூக்க என் வாக்கினால்
நெல்லு நீன்வயல் **நீலக்குடி** அரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன் அன்றே. – அப்பர்.

2. திருஇலந்துறை : அருள்மிகு.உமையம்மை உடனாய சுந்தரேச திருக்கோயில்.

திருநீலக்குடியின் தெற்கு 3 கி.மீ. **அ/மி சுந்தரேசர் கோயில்.** திருமாலும், வியாசரும் பணிந்தது. **செவ்வாய் தோஷ நிவர்த்தித் தலம்.**

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தென் பதரிகாச்ரமம் என்ற பெருமை. தலமரம் இலந்தையின் அடியில் வியாசர் வழிபட்ட **வியாசேஸ்வரர்** சன்னதி சிறப்பு.

சித்திரைப் பிறப்பு சமயம் 3 நாள் சூரிய பூஜை. வியாச தீர்த்தத்தில் நீராடி 108 முறை வியாசேஸ்வரரை வலம் வந்து, அபிராமி சன்னதியில் நெய், மாவிளக்கு தீபம் ஏற்றி, முப்பழங்கள் நிவேதித்து, சுவாமியையும், அம்மனையும் 21 முறை சுற்றிய பின் அர்ச்சனை செய்து வழிபட, சகல தோஷமும் நிவர்த்தியாகும் சிறப்பு. **கார்த்திகைச் செவ்வாய்** பகல் 12-1.30க்குள் நீராடி வழிபட முக்தி உறுதி என்று வியாசர் போற்றியது. 612 108.

ஆற்றலறியேன் மிக்க போற்றலறியேன்
நிகழ் ஆகம புராண மறியேன்
தூற்றனேன் உன்னுடைய தோற்றமறியேன்
தூய தோத்திரம் செய்யவறியேன்
ஏற்று நீ என்னுடைய இடர்களைத்
தீர்த்துவை எழில் **இலந்துறை**யினம்மா...

3. ஏனாதிமங்கலம் : அருள்மிகு.உமையம்மை உடனாய சோமநாதர் திருக்கோயில்.

இலந்துறையின் தென்மேற்கு 1 கி.மீ. **அ/மி சோமநாதர் கோயில்.** எமதர்மன் பூஜித்து நன்மையடைந்த தலம். அவரவர் **பிறந்த நக்ஷத்திரத்தன்று** வழிபட நல்ஆயுள் காக்கும் சிறப்புடையது. திருவிடைமருதூர் புராணத்தில் குறிப்புள்ளது. எம தீர்த்தமும், கோஷ்ட மூர்த்திகளும் மிகு சிறப்புடையவை. மிகப் பழமை. 612 108.

4. திருநாகேஸ்வரம் : அருள்மிகு.குன்றமாமுலையம்மை உடனாய அருள்தரு.நாகநாதசுவாமி திருக்கோயில். மூவர்பாடல் -6

திருவிடைமருதூரின் தென்மேற்கு 4 கி.மீ. அரிசிலாற்றின் வடகரை. **அ/மி நாகநாதசாமி கோயில்.** பெரிய புராணம் அருளிய **சேக்கிழார்** மிகவும் நேசித்த தலம். இவ்வாலயம் போன்று, அவர் குன்றத்தூரில் கோயில் எழுப்பக் காரணமான பதி. இராகுவிற்கு பால் அபிஷேகம் செய்கையில் பால் நீலநிறமாகிறது. ராகுவிற்கு தனி சன்னதி. கிரகதோஷ நிவாரணத்தலம். **உச்சிகாலபூசை சிறப்பு. கார்த்திகை** மாதம் **ஞாயிற்றுக் கிழமையில்** தீர்த்தமாடுதல் மிகு சிறப்பு. **ஒரே நாளில்** காலையில் **குடந்தை**யிலும், உச்சி காலத்தில் **திருநாகேசு**வரத்திலும், மாலையில் **திருப்பாம்புர**த்திலும், அர்த்த ஜாமத்தில் **நாகப்பட்டினத்திலும்** வழிபடுவது மிகு சிறப்பும் பயனும் உடையது. (தேவார திருப்புகழ் தலம்) 612 204.

கல்லால் நிழல் மேயவனே கரும்பின்
வில்லான் எழில் வேவ விழித்தவனே
நல்லார் தொழு **நாகேச்சுர** நகரில்
செல்வா என வல்வினை தேய்ந்து அறுமே - சம்பந்தர்.

5. திருபுவனம் : அருள்மிகு.புவனேஸ்வரி உடனாய அருள்தரு.கம்பஹரேசுவரர் திருக்கோயில். (அப்பர் வைப்பு)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவிடைமருதூரின் மேற்கு 2 கி.மீ. குடந்தையின் கிழக்கே 6 கி.மீ. **அ/மி கம்பஹரேசுவரர் கோயில்.** தஞ்சை பிரகதீசுவரர் கோயில் போல அமைக்கப்பட்டது. முன் கோபுரத்தை விட கருவறை விமானம் உயரம். **தருமையாதீன நிர்வாகம்.** பட்டுக்கு பெயர் போன ஊர். பரமன் கோயில் சிற்பத்தினாலும் பாரறிந்த ஒன்று. நரசிம்ம மூர்த்தியை சாந்தப்படுத்திய **சரபமூர்த்திக்கு** மிகப் பிரசித்தமான சன்னதி. பகை நீங்கிடப் பணிவதற்கு ஏற்ற தலம். (தேவார திருப்புகழ் தலம்) 612 203.

6. திருவிடைமருதூர் : அருள்மிகு. பெருநலமுலையம்மை உடனாயஅருள்தரு.மகாலிங்கேசுவரர் திருக்கோயில். மூவர்பாடல்.

கும்பகோணத்தின் வடகிழக்கு 8 கி.மீ. **அ/மி மத்யார்ஜீனேசர்** என்ற **மகாலிங்கர் கோயில்.** குடந்தையைச் சுற்றியுள்ள பஞ்சக்ரோச தலங்களில் ஒன்று. மதுரைத் திருவிளையாடல் தொடர்புடையது. வரகுண பாண்டியனின் **பிரம்மஹத்தி தோஷம் நீக்கிய பதி. சிவபெருமான் தன்னைத்தான் பூஜித்த பதி.** மதுரையில் உள்ளது போல, ஒவ்வொரு திருச்சுற்றும் தனிச்சிறப்பு உடையவை. மௌனமாய் தவமியற்றும் மூகாம்பிகை சன்னதியுள்ளது. **திருவாவடுதுறை ஆதீன நிர்வாகம்.** (தேவார திருப்புகழ் தலம்) 612 104.

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேபிறவித் துயர் நீத்திடும்
எம்மை ஆளும் **இடைமருதன்** கழன்
செம்மையே தொழுவார் வினை சிந்துமே – அப்பர்.

7.மருத்துவக்குடி : அருள்மிகு.உமையம்மை உடனாய மருதீசர் திருக்கோயில்

(இடைக்குளம்) குடந்தையின் வடகீழ் 13 கி.மீ. (ஆடுதுறை ரயில் நிலையமருகே) **அ/மி உடையமருதீசுவரர், ஐராவதீஸ்வரர்** மற்றும் **அ/மி விசுவநாதர் கோயில்கள்** சுயம்பு. ஐராவதம், ஆதிசேடன், அக்னி பணிந்தது. பதஞ்சலி, வியாக்ரபாதர்க்கு, ஒரு திருவாதிரையன்று, **சிதம்பரக் காட்சி**யருளிய பதி. **தக்ஷிண கைலாசம்** என்ற பெருமையுடையது. **ஆவணி**யிலும், **கார்த்திகை திங்கட்கிழமைகளிலும்** சந்திர தீர்த்த நீராடல் சிறப்பு. (தேவார திருப்புகழ் தலம்) 612 101.

மார்க்கண்டேயரால் துவக்கப்பட்ட திருவிழா. **சித்திரை மாதம் தேய்பிறை விசாகத்தன்று** (திருவையாற்றைப் போலவே) ஏழூர் பிரதக்ஷிணம். ஐயாறில் நந்தி வருவது போல இங்கு மார்க்கண்டேயர் உடன் வருகிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

7. கஞ்சனூர் - சப்தஸ்தான விழா
(ஏழூர் வலம் வருவிழா)



கஞ்சனூர் : வடகரைத் தலங்கள் 63ல் 36வது தலம்.

மூவிலை நற்சூலம் வலனேந்தினானை
மூன்றுசுடர்க் கண்ணானை மூர்த்தி தன்னை
நாவலனை நரைவிடை யொன் தேறுவானை
நால்வேதம் ஆறங்க மாயினானை
ஆவினிலைந்து கந்தானை அமரர் கோவை
அயன் திருமால் ஆனானை அனலோன் போற்றுங்
காவலனைக் கஞ்சனூராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே.

- அப்பர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கும்பகோணத்திலிருந்து பதினாறு கிலோமீட்டர் தொலைவில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது.

கோயிலமைப்பு

திருக்கஞ்சனூர் இறைவன் பெயர் அக்னீஸ்வரர். இறைவி பெயர் கற்பகநாயகி. கோயில் நடுவே கருவறையும் அதன்முன்பு அந்தராளமும், ஸ்தபன மண்டபமும் காட்சியளிக்கின்றன. அர்த்த மண்டபத்தில் உற்சவ மூர்த்திகளின் திருமேனிகளும் சோமாஸ்கந்தர் சந்நிதிகளும் அமைந்திலங்குகின்றன. அர்த்த மண்டபத்தின் இடதுபுறத்தில் நடராசர், சனி, சூரியன், சந்திரன், சுரைக்கா பக்தர், சுரைக்காபக்தர் அம்பாள், நவக்கிரங்கள், நால்வர் சிலைகள் காணப்படுகின்றன. மானக்கஞ்சார நாயனார் அவதாரத்தலம்.

இரண்டு திருச்சுற்றுக்களுடன் விளங்கும் திருக்கஞ்சனூர் கோயில் முதல் திருச்சுற்றின் வடக்குப் பகுதியில் தலவிருட்சமான புரசுமரம் உள்ளது. கிழக்குப் பார்த்தமைந்த இக்கோயிலின் நுழைவாயில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. வாயில் இராசகோபுரம் பெருமிதத்துடன் திகழ்கிறது. கிழக்குப் பக்கம் ஒரு வாயிலும் அதில் சிறிய கோபுரமும் உள்ளது. கோயில் கிழக்கு வாயில் முன்பாகத் திருக்குளம் உள்ளது. இக்கோயில் ஏறத்தாழ மூன்று ஏக்கர் பரப்புடையது. **கஞ்சனூரில் காவிரி வடக்குநோக்கி உத்தரவாகினியாக ஓடுகிறது. அதனால் காசிக்கு வீசம் அதிகம் கஞ்சனூர் என்பர்.**

இங்குள்ள கோயிலில் ஆண்டுதோறும் மாசிமகத் திருவிழா பத்துநாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழா முடிந்த இரண்டாம் நாள் உத்திரம் நட்சத்திரத்தன்று ஏழூர்த் திருவுலா நடைபெறுகிறது.

காரணம் :

மாமுனிவர் ஹரதத்தர் வாழ்ந்த காலத்தில் அவர் நாள்தோறும் ஆறு ஊர்களுக்கும் சென்று வழிபட்டு இறுதியில் அர்த்தசாம வழிபாட்டிற்குக் கஞ்சனூர் வருவது வழக்கம். இந்நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே ஹரதத்தர் ஏழூர்களையும் சுற்றி வரும் வகையில் ஏழூர்த் திருவுலா கொண்டாடப்படுகிறது. ஹரதத்தர் ஏழூர் வலம் வரும் காலத்தில் மூன்று நாட்கள் கஞ்சனூர் கோயிலில் வழிபாடு நடைபெறுவதில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

ஹரதத்த சிவாச்சாரியார் வரலாறு

நூறு ஆண்டுகட்கு முன் கஞ்சனூரில் வசுதேவர் எனும் வைணவருக்கு சுதர்சனர் எனும் குழந்தை பிறந்து வளர்ந்து வந்தது. வைணவகுடும்பத்தில் பிறந்த குழந்தை ஒருநாள் இரவு சிவன்கோயிலில் தனியே தங்கநேர்ந்தது. இரவு இறைவனை வணங்கும் ஐந்துவயதுக் குழந்தைக்கு தெட்சணாமூர்த்தி காட்சி தந்து சிவலிங்கம், உருத்திராக்கம், திருநீறு அணிவித்து **"ஹரதத்தர்"** எனும் தீட்சா நாமமுமிட்டார்.

மறுநாள், இதனைக் கண்ட தந்தை வருந்தி எவ்வளவோ சொல்லியும் அவருக்கு அக்குழந்தை பல நீதிகளைச் சொலலியது. இதனால் வைணவத்துக்கு ஆபத்துவரும் எனக்கருதி சூழ்ச்சியாகத் திட்டமிட்டு **பழுக்கக் காய்ச்சிய இரும்பு முக்காலி மீது அமர்ந்து சிவமே பரம்பொருள் என மூன்றுமுறை** சொன்னால் ஏற்பதாகக் கூறினார். குழந்தையும் அவ்வாறே அமர்ந்து கூறியதைக்கேட்டு வியந்து தந்தையும், மற்ற வைணவரும் சைவராயினர்.

இக்காட்சியைச் சித்தரிக்கும் உருவம் இவ்வூர்ப் பெருமாள் கோயிலிலும், அக்னீஸ்வரர் சிவன்கோயில் நடராசர் சந்நிதியிலும் உள்ளது. பெருமாள் கோயிலிலும் அக்னீஸ்வரர் உடன் கற்பகாம்பாள் எழுந்தருளியுள்ளனர் என்பது தனிச்சிறப்பு. ஹரதத்தருக்கு உபதேசம் செய்த தெட்சிணாமூர்த்தி திருவுருவில் ஹரதத்தர் உருவம் உள்ளது கண்டு மகிழலாம். ஹரதத்தர் சிவபூசை செய்வது போன்று உள்ள தனிக்கோயிலும் இத்தலத்தில் உள்ளது ஓர் தனிச்சிறப்பு.

ஆண்டுதோறும் தை மாதம் உத்திராயண சுக்லபட்ச பஞ்சமி நாளில் சந்நிதித்தெருவில் **ஹரதத்தருக்கு சிவபெருமான் கைலாய காட்சி கொடுக்கும் விழா தொன்று தொட்டு நடந்து வருகிறது.**



வெள்ளி ரிஷப வாகனங்களில் ராஜ அலங்காரத்தில் கைலாயக் காட்சியாக அருள்பாலிக்கும் கஞ்சனூர் கற்பகாம்பிகா சமேத அக்னீஸ்வர சுவாமி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏழூர் வழிபாடு : திருக்கஞ்சனூர் சப்தஸ்தானம்

ஹரதத்தர் கண்ணாடி பல்லக்கில் எழுந்தருளி அவர் நாள்தோறும் ஏழூர் சென்று வழிபட்டதன் நினைவாக நடைபெறுவது.

1. திருக்கஞ்சனூர் : அருள்மிகு. கற்பக நாயகி உடனாய அருள்தரு.அக்னீசர் திருக்கோயில். பாடல் : திருநாவுக்கரசர் –1

அ/மி அக்னீசுவரர் ஆலயம். ஹரதத்தர் என்பவர், வைணவராகப் பிறந்தாலும், சிவபஞ்சாக்ஷரத்தின் மேன்மையை பல வகையிலும் நிரூபித்த தலம். மதுரையில் கல்யானை கரும்பு தின்றது போல, **கல்நந்தி புல்தின்ற அதிசயம் நடந்த பதி.** மானக்கஞ்சர்ற நாயனார் பிறந்த தலம். (தேவாரத்தலம்) 609 804.

மூவிலை நற்சூலம் வலன் ஏந்தினானை
மூன்று சுடர்க் கண்ணானை மூர்த்தி தன்னை
நாவலனை நரைவிடையொன் றேறுவானை
நால்வேதம் ஆறங்கம் ஆயினானை
ஆனிலைந்து கந்தானை அமரர் கோவை
அயன் திருமாலானானை அனலோன் போற்றுங்
காவலனைக் **கஞ்சனூர்** ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய் ந்தேனே – அப்பர்.

2. திருவாவடுதுறை : அருள்மிகு.ஒப்பிலாமுலையம்மை உடனாய அருள்தரு மாசிலாமணீசர் திருக்கோயில். (மூவர் பாடல்பெற்றது)

குடந்தையின் வடகிழக்கு 20 கி.மீ. **அ/மி மாசிலாமணீசுவரர் கோயில்.** சப்தவிடங்கத் தலங்களில் ஒன்று (நீலவிடங்கர் – கமல நடனம்). வருடம் ஒரு பாட்டாக, 3000 பாடல்கள் கொண்ட **திருமந்திரம்** இயற்றிய **திருமூலநாயனார்**

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவதரித்த ஊர். அம்பிகை பசு வடிவில் இறைவனை வழிபட்ட பதி. சைவப் பணி மூலம் தெய்வீகம் பரப்பும் **திருவாவடுதுறை ஆதீனம் உடையது.** சுந்தரர்க்கு ஈசன், திருவாரூர் தியாகேசனாக காட்சியருளிய பதி. (தேவார திருப்புகழ் தலம்) 609 803.

செறிவிலேன் சிந்தையுள்ளே சிவனடி தெரியமாட்டேன்
குறியிலேன் குணமொன்றில்லேன் கூறுமா கூறமாட்டேன்
நெறிபடு மதியொன்றில்லேன் நினையுமா நினைய மாட்டேன்
அறிவிலேன் அயர்த்து போனேன் **ஆவடு துறையுளானே** – அப்பர்.

3. தென்குரங்காடுதுறை : அருள்மிகு.உமையம்மை உடனாய அருள்தரு. ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்.

திருவிடைமருதூரின் கிழக்கு 4 கி.மீ. **அ/மி ஆபத்சகாயேஸ்வரர் கோயில்.** சுக்ரீவனும், அனுமனும் பூஜித்த பதி. சிதம்பரம் செல்ல முடியாத முனிவர்களுக்கு சிவபெருமான் **தில்லைக் கூத்து** தரிசனம் அருளிய பதி. **சித்திரை 5,6,7ல் சூரிய பூஜை** சிறப்பு. காரிய சித்தியருளும் துர்க்கைக்கு வெள்ளிக்கிழமை இரவில் எலுமிச்சை விளக்கு ஏற்ற விசேஷம். அனுதினமும் ஏழூர் வழிபட்ட **ஹரதத்தருக்கு,** காவிரியில் வெள்ளம் வந்த போது இங்கே **ஏழூர் தரிசனமும்** அருளிய சிறப்பு. சொர்ண பைரவர் சிறப்பு. 612 101.

நற்றவஞ் செய்த நால்வர்க்கும் நல்லறம்
உற்ற நன்மொழியால் அருள்செய்த நல்
கொற்றவன் **குரங்காடுதுறை** தொழப்
பற்றுந் தீவினையாயின பாறுமே – அப்பர்.

4. திருமங்கலக்குடி : அருள்மிகு.மங்களநாயகி உடனாய அருள்தரு.பிராணவரதேசுவரர் திருக்கோயில். (சம்பந்தர், அப்பர்பாடல்.)

திருவிடைமருதூரின் வடகீழ் 5 கி.மீ. **அ/மி பிராணவரதேசுவரர் ஆலயம்.** திருமணத்தடை நீக்கும் தலம். வரிப்பணத்தால் கோயில் கட்டிய மந்திரி அரச தண்டனைக்குப் பயந்து இறந்தபோது, அவன் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்ட தலம். நவக்கிரகங்களுக்கு ஏற்பட்ட குட்டநோய் தீர்ந்தவிடம். அதன் பின்னரே அவர்கள் **சூரியனார் கோயிலில்** தனித்தனி சன்னதி பெற்றனர். தீராப் பிணியையும் போக்கும் பதி.(தேவாரத்தலம்) 612 102.

கூசு வாரலர் குண்டர் குணமிலர்
நேச மேது மிலாதவர் நீசர்கள்
மாசர் பால் **மங்கலக்குடி** மேவிய
ஈசன் வேறுபடுக்க உய்ந்தேனன்றே – அப்பர்.

5. திருமாந்துறை : அருள்மிகு.அழகம்மை உடனாய அருள்தரு.ஆம்ரவனேசர் திருக்கோயில். (சம்பந்தர் பாடல்)

குடந்தையின் வடகீழ் 12 கி.மீ. (சூரியனார் கோயில் சமீபம்) சம்பந்தர் பணிந்தது. பதிகம் கிடைத்திலது. **அ/மி அக்ஷயநாதர் கோயில்.** (தேவாரத்தலம்) 612 102.

6. திருக்கோடிக்காவல் : அருள்மிகு.வடிவாம்பாள் உடனாய அருள்தரு கோடீசுவரர் திருக்கோயில். பாடல் : சம்பந்தர், நாவுக்கரசர் – 4

திருவிடைமருதூரின் வடகீழ் 2 கி.மீ. **அ/மி கோடீஸ்வரர் ஆலயம்.**

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெரியகோயில் எனக் கேட்டால், உடனே வழி கூறுவர். முக்கோடி முனிவர் பூஜித்த தலம். அகத்தியர் வழிபட்ட கரையேற்றும் விநாயகர் சன்னதி. கண்டராதித்த சோழனின் மனைவி செம்பியன் மாதேவி திருப்பணி செய்தது. 609 802.

காலைக் கலையிழையாற் கட்டித் தாங்கைப்பார்த்து
மாலை தலைக்கணிந்து மைஎழுதி – மேலோர்
பருக்கோடி மூடிப் பலர் அழா முன்னம்
திருக்கோடிக்கா அடை நீ சென்று – ஐயடிகள் காடவர் கோன்.

7.திருவாலங்காடு : அருள்மிகு.உமையம்மை உடனாய அருள்தரு. சிவன் திருக்கோயில்.

திருவிடைமருதூரின் வடகீழ், குத்தாலம் வழியில் 10 கி.மீ. **அ/மி உத்பலேஸ்வரர் ஆலயம்** மற்றும் **அ/மி வடவாரண்டேஸ்வரர் ஆலயம்.** உலகன்னையே பரத முனிவரின் குழந்தையாகிட உதவிய புத்திர தீர்த்தமும், புத்திர காமேசுவரர் சன்னதியுமுள்ளது. சத்புத்ர பாக்கியம் அருளும் தலம். பங்குனி அமாவாசை வழிபாடு சிறப்பு. **திருவாவடுதுறை ஆதீன நிர்வாகம்.** (தேவார வைப்புத்தலம்) 609 810.

மேற்குறிப்பிட்ட ஏழூர்களில் கருந்திட்டைக்குடி, திருநல்லூர், திருநிலக்குடி, திருக்கஞ்சனூர் ஆகிய நான்கு ஊர்களிலும் நிதிநெருக்கடி காரணமாகத் தற்காலத்தில் இவ்விழா நிகழ்வதில்லை.

ஒப்பீட்டாய்வு

தஞ்சை மாவட்டத்தில் ஏழூர்த் திருவிழா நடைபெறும் அனைத்துக் கோயில்களும் சிவாலயங்களாகவே விளங்குகின்றன. எல்லாக் கோயில்களிலும் சிவனே மூலவராகக் காட்சியளிக்கிறார்.

ஏழூர்த் திருவிழாவிற்கான காரணங்கள் ஒவ்வொரு ஊரிலும் வெவ்வேறாக அமைந்துள்ளன. திருவிழாத் தொடங்கும் மாதமும் நட்சத்திரமும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

திருப்பல்லக்குகள் விழாவன்று திருவையாறு உள்ளிட்ட ஏழூர்களிலும் அவ்வவ்வூர்களிலே புறப்படுகின்றன. புறப்படும் இடமாகிய திருவையாறு, கருந்திட்டைக்குடி, திருச்சக்கராப்பள்ளி, திருநல்லூர், கும்பகோணம் முதலான ஐந்து ஊர்களின் கோயில்களில் இருந்தும் இரண்டு பல்லக்குகள் புறப்பட்டு உலாச்செல்கின்றன. இரண்டு பல்லக்குகளில் **பெரிய பல்லக்கு** ஐந்து ஊர்களிலும் **கண்ணாடிப் பல்லக்காகவே** விளங்குகின்றன. சிறிய பல்லக்கு திருவையாறு, கருந்திட்டைக்குடி, திருச்சக்கராப்பள்ளி, திருநல்லூர் ஆகிய நான்கு ஊர்களிலும் வெட்டிவேர்ப் பல்லக்குகளாகவும், கண்ணாடிப் பல்லக்காகவும் அமைந்துள்ளன. திருநீலக்குடி, திருக்கஞ்சனூர் ஆகிய இரண்டு ஊர்களிலும் பெரிய பல்லக்கு ஒன்று மட்டுமே ஏழூர்களுக்கும் உலா சென்று வருகின்றன. இப்பெரிய பல்லக்கும் **கும்பகோணத்தில் மட்டும் கண்ணாடிப் பல்லக்காகவே** அமைந்துள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இத்திருப் பல்லக்குகள் புறப்பட்டு ஏனைய ஊர்களுக்குச் செல்லும்போது அந்தந்த ஊர்களிலும் பல்லக்குப் புறப்பட்டு சுவாமி, அம்பாளுடன் உடன் வருதல் ஐயாற்றுப் பல்லக்கு விழாவில் மட்டுமே நடைபெறுகிறது. கருந்திட்டைக்குடி, திருச்சக்கராப்பள்ளி, திருநல்லூர், கும்பகோணம் ஆகிய நான்கு ஊர்களிலும் பெரிய பல்லக்கு, சிறிய பல்லக்கு இரண்டும் மட்டுமே மற்ற ஆறு ஊர்களுக்குச் சென்று வருகின்றன. திருநீலக்குடி, திருக்கஞ்சனூர் ஆகிய இரண்டு ஊர்களிலும் ஒரு பல்லக்கே மற்ற ஆறு ஊர்களுக்கும் சென்று திரும்புகிறது.

ஏழூர்த் திருவுலாவிற்காகப் பல்லக்குகள் புறப்பட்டு ஏனைய ஊர்களுக்குச் செல்லும்போது அவ்வூர்ப் பல்லக்குகள் சுவாமி அம்பாளுடன் அலங்காரத்துடன் புறப்பட்டு, வருகின்ற பல்லக்குகளை எதிர் கொண்டழைத்தலும், முதல் பல்லக்குடன் பிற ஊர்களுக்குச் செல்லுதலும் ஐயாறப்பர் திருக்கோயில் திருவிழாவில் மட்டுமே நிகழ்கிறது. கருந்திட்டைக்குடி பல்லக்குகள் மற்ற ஊர்களுக்குச் செல்லும்போது அவ்வூர் இறைவன் இறைவியுடன் படிச்சட்டத்தில் எழுந்தருளி எதிரழைத்தலும், வழிபாடுகள் முடிந்த பின்னர் ஊர் எல்லைவரை சென்று வழியனுப்பி வைத்தலும் நடைபெறும். இந்நிகழ்ச்சி மற்ற ஊர்களில் நடைபெறுவதில்லை. திருச்சக்கராப்பள்ளி, திருநல்லூர், கும்பகோணம், திருநீலக்குடி, திருக்கஞ்சனூர் ஆகிய ஐந்து ஊர்களிலும் பல்லக்குகள் அடுத்த ஊர்களுக்குச் செல்லும்போது அவ்வூர் இறைவர் இறைவியுடன் பூரணகும் பத்துடன் வந்து பல்லக்கினை எதிர்கொண்டழைக்கும் நிகழ்வு நடைபெறுகிறது.

ஏழூர்த் திருவுலாவில் பல்லக்குகள் புறப்படும் மூலக்கோயிலில் பல்லக்குகளுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்வதுடன் ஒவ்வொரு ஊருக்குச் செல்லும் போதும் அவ்வூர்க் கோயில்களில் பல்லக்குகளுக்கு வழிபாடுகளும் நிகழ்கின்றன. இந்நிகழ்ச்சி அனைத்து ஊர்ப்பல்லக்கு விழாக்களிலும் காணப்படும் பொதுக் கூறாகவேயுள்ளது.

திருப்பல்லக்குகள் திருச்செலவில் இரவு தங்கல் மூன்று ஊர்களில் நடைபெறும் ஏழூர்த் திருவுலாவில் மட்டுமே நிகழ்கின்றன. கருந்திட்டைக்குடி விழாவில் பல்லக்குகள் உலாச்செல்கையில் இரவு தஞ்சாவூரில் தங்குகின்றன. திருநல்லூர்ப் பல்லக்குகள் உலா நிகழ்வில் இரவு மாளிகைத்திடலில் தங்குகின்றன. திருநீலக்குடி திருவுலாவில் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி திருக்கோயிலில் பல்லக்கு இரவு தங்குகிறது. ஏனைய நான்கு ஊர்களிலும் திருவுலா நடைபெறுகையில் திருப்பல்லக்குகள் எவ்வூரிலும் தங்காமல் தொடர்ச்சியான திருப்பயணத்தை மேற்கொள்கின்றன.

ஆன்மிக அன்பர்களும், சிவசிந்தனையாளர்களும் இறை ஈடுபாட்டுணர்வாளர்களும் தேவார கோஷ்டிகளும் பல்லக்குகளுடன் நடந்து உலா வருவதையே தங்கள் வாழ்வின் பெரும் பேறாகக் கருதி நடந்து வருதல் அனைத்து ஊர்த்திருவுலாவிலும் காணப்படுகின்ற வழக்கு பொது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பல்லக்குகள் புறப்படும் ஊரைச்சுற்றி வலம் வருதல் விழாவின் முடிவிலேயே நடைபெறுகின்றன. ஏழூர்த் திருவிழா நடைபெறும் ஏழு ஊர்களிலும் இம்முறையே நடைமுறையில் உள்ளது.

பல்லக்குகளின் வடிவங்களைப் பொறுத்தளவில் ஐயாற்றுக் கண்ணாடிப் பல்லக்கினைப் போன்றே அனைத்து ஊர்களின் கண்ணாடிப் பல்லக்குகளும் அமைந்துள்ளன. வெட்டிவேர்ப் பல்லக்கும் திருவையாற்று வெட்டிவேர்ப் பல்லக்கினைப் போன்றே வடிவமைந்துள்ளது. கும்பகோணத்தில் மட்டும் ஐயாற்று வேட்டிவேர்ப் பல்லக்களவில் சிறிய கண்ணாடிப் பல்லக்கு வெட்டிவேர்ப் பல்லக்கிற்கு நிகராகப் பயன்படுத்தப் படுகிறது.

தேவாரத் திருக்கூட்டத்தினருடன் நாதசுவர இசையோடு பல்லக்குகள் திருவுலா செல்வதோடு வாண வேடிக்கைகளும் அனைத்து ஏழூர்த் திருவுலாவிலும் நடைபெறுகின்றன.

நிறைவுரை

நதிகள் ஏழு, பிறப்புக்கள் ஏழு, முனிவர்கள் ஏழு, இசைகள் ஏழு என்பனபோன்று ஏழு எனும் சிறப்பிற்குரியஏழூர்க்கோயில் திருவிழாவும் தஞ்சை மாவட்டத்தில் பெருமையுடன் நடைபெறுகின்றன. இவ்விழா நடைபெறும் மூலக்கோயில்கள் ஏழும் பழமைமிக்கதோடு மட்டுமின்றி மண்டபங்கள், திருச்சுற்றுக்கள், கோபுரங்கள், தல விருட்சம், திருக்குளத்துடன் அகன்ற பரப்பளவோடு எழில்மிகு அமைப்பினையும் பாடல் பெற்றத் தலங்களாகவும் திகழ்கின்றன.

இதன் தத்துவம் :

சிறப்புமிக்க ஏழூர் விழா நடைபெறும் தலங்களின் மூல மூர்த்திகளான அம்மையப்பர் - தாம் வழிகாட்டப் பின்வரும் தலைமை அடியார் பெருமக்கள் தமக்குத் திருவடிப் பேறு கிட்டுதலைக் குறிப்பதாகும்.

அதாவது, ஜீவாத்மாவாகிய அடியார்கள், திருவருள் துணைகொண்டு ஆறு ஆதாரங்களான 1.சாக்ரம், 2.சொப்பனம், 3.சுழுத்தி, 4.துரியம், 5.தூரியாதீதம், 6.அதீதாந்தம் ஆகியவற்றை அடைந்து இறுதியில் 7 சன்மயம் - எனும் நிலையை அடைந்து சிவனோடு ஐக்கியம் ஆவதைக் குறிக்கும் தத்துவ விளக்கமே இவ்விழாக்கள்.

இவ்வேழூர்களில் திருவையாறு நந்தீசர், சுயசாம்பிகையும், கரந்தை வசிட்டர் அருந்ததியும், திருநல்லூர் அகத்தியருக்காக இறைவன் இறைவியும், கும்பகோணம் விநாயகர் சித்தியும் திருமண ஊர்வலமாக வலம் வருகின்றனர். திருநல்லூரில் அகத்தியரும், திருநீலக்குடியில் மார்க்கண்டேயரும், கஞ்சனூரில் அரதத்தரும் தனியாக வருகின்றனர்.

மேலும், இதன்நோக்கமே மக்கள் மனம் ஒன்றுபட்டு இறைவனோடு சேர வழிவகை செய்யப்படுகின்ற ஒற்றுமை விழாவுங்கூட. ஏழூர் வலம் வருதலை ஆண்டுதோறும் மேற்கொண்டவர்கள் தமக்கு திருமணம் வாய்த்தது என்றும், மக்கட்பேறு கிட்டியது என்றும், பிணி அகன்றது என்றும் அவரவரர் அனுபவத்தைக் கூறா நிற்பர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தருமை குருமகா சந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடிக்கமலங்களுக்கு அடியோம் விண்ணப்பம்.

தஞ்சை பெரிய கோயிலைக்கட்டிய இராசராச சோழனுக்கு ஆண்டுதோறும் ஐப்பசி சதய விழா அரசு விழா எடுக்கிறது. அதுபோல திருவையாறு அருள்மிகு ஐயாறப்பர் திருக்கோயிலை ஆதியில் கி.மு.வில் கட்டியவன் **கரிகாற் சோழன்.** இக்கோயில் மட்டுமல்ல எம்மன்னரும் செய்யாத அரிய செயலாக காவிரிக்குக் கல்லணை கட்டி கரையும் எழுப்பிய மாமன்னனுக்கும் நன்றி மறவாது **ஆண்டுதோறும் ஒரு நாள் விழா எடுப்போம்.**

அவ்வாறே, சரபோஜி மன்னன் காலத்தே திருவையாற்றில் 18ஆம் பெருக்கன்று **காவிரிக்கும் - சமுத்திரராசனுக்கும் திருக்கல்யாணம்** செய்வித்தான். அதனையும் செயல்படுத்த திருவருள் கூட்டுவிக்க வேண்டுவோம்.

வாழ்த்து :

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம் – சேக்கிழார்.

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவையாறா போற்றி.

வாழ்க வளமுடன்! வாழ்க நலமுடன்!
என்றும் எங்கும் நலமே தழைக!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருச்சிராப்பள்ளித் திருமுறை மன்றச் சார்பில் 10.08.2008 அன்று
மதுரை ஆதீனம் அவர்களால் " சைவத்தமிழ் அறிஞர் " என்னும்
பன்னிருதிருமுறை விருது திருவையாறு புலவர். கோ.சு அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

29.5.2006 அன்று
26வது குரு மகாசந்நிதானம் சதாபிஷேக நாளில்
" தருமை ஆதீனப் புலவர் " விருது பெற்ற புலவர்கள்:

1. புலவர் திரு.நீ.சி. சுந்தரராமன் - மதுரை. உழவாரம் ஆசிரியர்.
2. புலவர் திரு. கோ. சுப்பிரமணியனார் - திருவையாறு, இந்நூலின் ஆசிரியர்.
3. புலவர் திரு. மு.வைத்தியநாதன் - திருச்சி.
4. முனைவர் திரு. மு. சிவச்சந்திரன் - தருமபுரம்.
5. புலவர். திரு. சு. இராஜேஸ்வரன் - காரைக்கால்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவ: சிவ:

நூலாசிரியப் பேராசிரியப் பெருமக்கள் :



80,70 முத்து, பவள விழா - சதாபிடேகம் கண்ட புலவர் தம்பதியர். தருமை குரு மகா சந்நிதானத்தால் தருமை ஆதீனப்புலவர் விருதும், தங்கத்தோடாவும், பொற்கிழியும் பெற்றவர்கள். காஞ்சித்திருமடம் ஜயேந்திர சரஸ்வதி பீடாரோகண ஐம்பதாம் ஆண்டில் சித்தாந்த வித்தகர் விருதும் தங்கஉருத்திராக்கமும், ரூபாய் பத்தாயிரம் பொற்கிழியும் பெற்றவர்கள். இதுபோல் இருபது விருதுகளுக்கு மேல் பெற்றவர்கள். இதுகாறும் நாற்பது ஆய்வு மாநாடுகளில் பங்கேற்று நாற்பது ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியவர்கள். அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நாற்பது ஆண்டுகள் பணியாற்றி தமிழக அரசால் "நல்லாசிரியர்" விருது பெற்றவர்கள். 1985ல் ஓய்வு பெற்று ஆண்டிற்கு ஒரு நூல் என இதுவரை முப்பது வெளியீடுகளை வெளியிட்டு சாதனை படைத்துள்ளார்கள். சிறந்த ஆய்வு நூலாக 1000 பக்க அளவில் திருவையாறு திருத்தல வரலாறு தக்க சான்றாகும். முக்கலைச் செல்வி புலவர். பத்மா எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., அவர்களின் துணைநலம் சார்ந்த உழைப்பும் இணைந்து உருவான நூல்கள் பலவற்றுள் இந்நூலும் ஒன்றாகும்.

ஓம்சக்தி - வாழ்க வளமுடன் - நலமுடன்

[illegible] திருவையாறு, செல் : 94439 41886

Center for Shaivam Studies, Pondicherry Collection